உ

கடவுள் துணை.

# செந்தமிழ்.

தொகுதி உரு] பிரபவ-ஹூ ஆடிமீ [பகுதி கூ.

Vol. XXV. *July-August-1927.* No. 9.

## ஆறனுருபு பிறிதுருபேற்றல்.

"ஆறனுருபு மேற்றுமவ் வுருபே" என்பது நன்னூற்சூத்திரம். இதற்கு ஆறாம்வேற்றுமையுருபும் மற்றையுருபுகளைபேற்றுவருமெனப் பொருளுரைத்து, அஃதேற்றுவருங்கால் சாத்தனது, சாத்தனதனை, சாத்தனதால், சாத்தனதற்கு, சாத்தனதனின், சாத்தனதனது, சாத்தனதன்கண் என உதாரணமுங்காட்டினர் மயிலைநாதர். இலக்கணவிளக்க நூலாரும் அவ்வாறேயுரைத்தனர். இவர்கள் உரையை மறுத்துச் சிவஞானமுனிவரும், உருபு இடைச்சொல்லாதலானும் சாத்தனதனை என்புழிச் சாத்தனது என்பது துவ்விகுதியும் அகரச்சாரியையும்பெற்று உருபேற்றுநின்ற பெயராமாதலின் ஆண்டு அதுவென ஒன்றாகவைத்து ஆறனுருபென்றல் பொருந்தாமையானும் பொருந்தாதெனக் கூறினர். அம்மறுப்புப் பொருத்தமுடையதன்றென்பதை யாம் ஈண்டுக் காட்டுவாம்.

"பெயர்வழித் தம்பொருள் தாவரு முருபே" எனவும், "ஏற்குமெவ்வகைப் பெயர்க்கு மீறாய்" எனவும் கூறப்படுதலினால் பெயர்ச்சொல்லே யுருபேற்குமென்பதும் வினைச்சொற்களும் பெயராய்நின்றவிடத்து உருபேற்குமென்பதும் நன்குபுலப்படும். ஆறாம்வேற்றுமையுருபேற்றுநின்ற சாத்தனது என்னும் சொல் ஆடையென்னும் சொல்லோடு சேருமிடத்து; சாத்தனது ஆடை பென ஆறாம்வேற்றுமை உடைமைப்பொருளில் வருகின்றது. ஆடை சாத்தனது என்புழி அவ்வுருபேற்றுநின்ற சொல்லே அப்பொருளில் வினைக்குறிப்புமுற்றாகின்றது. அச்சொல் வினைக்குறிப்புமுற்றாயவிடத்துப் பாலுணர்த்தும் ஈறுநோக்கி அவ்வுருபே துவ்விகுதியும் அகரச்சாரியையுமாகப் பிரிக்கப்படுகின்றது. பிரிக்கப்படினும் சாத்தனுடையது என உடைமைப்பொருளில் வருத

லானே ஆறனுருபு என்றார். ஆறனுருபென்பதற்கு ஆறனுருபேற்று நின்றசொல்லென்பதே யீண்டுப் பொருளாகும். இதுபற்றியே சேனாவரையரும் சொல்லதிகாரத்து "இறுதியுமிடையும்" என்னும் ௬௦௩-ம் சூத்திரத்து விரிவுரையின்கண் ஆறனுருபேற்ற பெயர் உருபோடுகூடிப் பெயராயும் வினைக்குறிப்பாயும் நிற்றலுடைமையான் அந்நிலைமைக்கண் ஆடைசாத்தனது என இறுதிக்கண்ணும் நிற்குமென்றும்,

"ஆடூஉ வறிசொல் மகடூஉ வறிசொல்
பல்லோ ரறியும் சொல்லொடு சிவணி
யம்முப் பாற்சொல் லுயர்திணை யவ்வே"

என்னும் ௨-ம் சூத்திரவுரையின்கண் சிவணியென்னும் வினையெச்சம் உயர்திணையவென்னும் வினைமுற்றுக்கொண்டது; ஆறாம்வேற்றுமையுருபேற்றுநின்றசொல் பெயராயும் வினைக்குறிப்பாயும் நிற்குமாதலால் என்றும் உரைத்தனர். இவ்வுரையை நுணுகிநோக்குமிடத்து உருபு இடையில்வரின் உருபாகவும் இறுதியில்வரின் வினைக்குறிப்புமுற்றாகவும் கொள்ளப்படும் என்பது நன்குபுலப்படுகின்றது. புலப்படுதலினால் சாத்தனது என்பது வினைக்குறிப்புமுற்றாய்நின்று உருபேற்குங்கால் குறிப்புமுற்றாலணையும்பெயராய்நின்று பிறிதுருபுகளை யேற்குமென்பது வெள்ளிடைமலைபோல் விளங்கக்கிடக்கின்றது.

இன்னும் மயிலைநாதர் சாத்தனது என்னும் ஆறாம்வேற்றுமையுருபேற்றுநின்றசொல் எழுவாயுருபுமேற்குமென்றும், அது சாத்தனதுவந்தது; சாத்தனவந்தன எனவும், சாத்தனது நன்று; சாத்தன நல்லன எனவும் வினையும் வினைக்குறிப்புங்கொண்டு முடியும் என்றும் உரைத்தமையை யாம் உற்றுநோக்கும்போது ஆறாம்வேற்றுமையுருபேற்றுநின்ற சொல்லே வினைக்குறிப்புப்பெயராய்நின்று பிறிதுருபேற்குமென்பதூஉம் ஏற்குங்காலும் தன் உடைமைப்பொருளிற் றீராமையின் ஆறனுருபென்றே வழங்கிவந்தனரென்பதூஉம் நன்கறியக்கிடக்கின்றது.

இவ்வாறு சாத்தனது என்னும் ஆறாம்வேற்றுமையுருபேற்றுநின்ற சொல் வினையாலணையும்பெயராய்நின்று பிறிதுருபுடையேற்குமென்பது பற்றியே சேனாவரையரும்,

"பிறிதுபிறி தேற்றலும் உருபுதொக வருதலும்
நெறிபட வழங்கிய வழிமருங் கென்ப"

என்னுஞ்சூத்திரத்தில், 'பிறிதுபிறிதேற்றலும்' என்பதற்குப் பிறிதோருருபு பிறிதோருருபையேற்றலும் என்று பொருள்கூறிச் சாத்தனதை என்பது முதலிய உதாரணங்களுங்காட்டிப் பெயரிறுதிநின்ற உருபு தன்பொருளோடு தொடாது பிரிதுருபையேற்றல் இலக்கணமன்மையின் வழுவமைதியென்றுங் கூறினர். உரையாசிரியர் முதலியோர்க்கும் இதுவே கருத்தாதல் அவரவருரைநோக்கித் தெளிக.

முனிவர் இவ்வுரையை மறுத்து இச்சூத்திரத்திற்கு இடையினும் இறுதியினும் உருபேற்றலும் இடையிற்றொக இறுதியினுருபுவருதலும் நெறிபடவழங்கியவழக்கைச்சார்ந்துவருதலான் வழுவாகா என்றுரைத்து இதற்கு முதற்சூத்திரத்திற்கு இடையினும் இறுதியினும் விரிந்து வருமென்றும் அது வடநூலார்மதம் என்றும் பொருளுரைத்தனர். தமிழ்மொழியிலக்கணம் கூறவந்த ஆசிரியர் அதன்கண் வடமொழியிலக்கணங் கூறினரென்றல் பொருத்தமில்கூற்றுமாதலானும், கூறினும் "அளபிற் கோட லந்தணர் மறைத்தே" என்புழிப்போல இங்ஙனம்கூறுவர் வடநூலார் என விளக்கச் சூத்திரிப்பார்மன்; அங்ஙனஞ் சூத்திரியாமையானும், பிறுண்டும் வடநூலார்மதம் இஃதிஃதென எடுத்துக்காட்டும் வழக்கு இந்நூலகத்தின்மையானும், "எல்லாமொழிக்கு முயிர்வருவழியே—உடம்படு மெய்யி னுருபுகொளல் வரையார்" எனவும், "உரைப்பொருட் கிளவி நீட்டமும் வரையார்" எனவும், "குட்டியும் பறழுங் கூற்றவண் வரையார்" எனவும், "பொருடெரி மருங்கின் ... தோற்றமும் வரையா ரடிமறியான" எனவும் வருமிடங்கடோறும் வரையாரென்பதற்குத் தமிழாசிரியர் என்பதே பொருளாக அமைதலின் ஈண்டும் அதுவே வினைமுதலாகக்கோடல் பொருந்துமன்றி, வடநூலார் எனக்கோடல் பொருநதாதலானும், வடநூலார்மத மிதுவெனின், அது வேண்டாக்கூற்றாய்முடிதலானும் வேறுபாடறிதற்குக்கூறினரெனின் அதனாற்போந்தபயன் ஈண்டி யாதுமின்றாதலானும் அவ்வுரை பொருந்தாதென்பது.

இன்னும்,

"ஐயுங் கண்ணு மல்லாப் பொருள்வயின்
மெய்யுருபுதொகா விறுதி யான"

என்னுஞ் சூத்திரத்தின்கண்வரும் 'தொகாவிறுதியான' என்னும் மறைப்பொருள் வேற்றுமைத்தொடரில் வருதலின், அத்தொடரிலேயே

அப்பொருளின் உடன்பாட்டுப்பொருளும் வருதல்வேண்டும்; அவ்வாறு வருதல் முனிவருரைக்கின்மையானும் அவருரை பொருந்தாதென்பது.

இன்னும், 'பிறிதுபிறிதேற்றலும் உருபுதொகவருதலும்' என்னுஞ் சூத்திரத்து, சூத்திரவிருத்தியுட்காட்டிய காரணங்களுள் உருபிடைச்சொல் வேற்றுமைபுருபேலாதென்பதூஉம், சாத்தனது என்பது துவ் விகுதியும் அகரச்சாரியையும்பெற்ற வினைக்குறிப்பாகுமன்றி உருபேற்ற பெயர்ச்சொல்லாகாதென்பதூஉம் முன்னே மறுக்கப்பட்டனவாதலானும், மறுக்கப்படவேண்டியதாய்நின்ற "இனமல்லவற்றை உடனெண்ணுதல் மரபன்"றென்பது, சேனவரையர் இச்சூத்திரம் வழுவமைதியென்று கூறுதலின், வழுவமைத்தற்கண் வழுவாவனவற்றையெல்லாம் வழுவாதலாகிய இனம்பற்றி உடன்எண்ணுதல் பொருந்துமென்பது அறியக்கிடத்தலான் அது மரபேயென மறுக்கப்படுதலினானும், அன்றியும், இருவழுவும் உருபுபற்றிய வழுவாதலானும் இனமாதல் பொருந்துமெனவும் மறுக்கப்படுதலினானும் சேனவரையருரையே பொருத்தமென்பது துணிபாம். துணிபாகவே அவருரைக்குக் காரணமாய்நின்ற உரையாசிரியர் முதலியோருரையும் பொருத்தமுடைத்தென்பதூஉம், அவை பொருத்தமுடையவாகவே, அவ்வழியெழுந்த பின்னோருரைகளும் பொருத்தமுடையவென்பதூஉந் தெற்றெனப்படும்.

அங்ஙனேல்; உருபுபிறிதேற்றலும் என விளங்கச் சூத்திரியாது "பிறிதுபிறிதேற்றலும்" எனச் சூத்திரித்ததென்னையெனின், அதனானும் ஓர்நயந்தோன்றற்கேயாம். என்னைநயமோவெனின்? உருபு இடைச்சொல்லாதலின் பிறிதுருபை ஏற்கமாட்டாதாதலின், உருபு தன்னையேற்றசொல்லோடுகூடிப் பெயர்த்தன்மையெய்திநின்ற என்னும் வேற்றுமைநயமேயாம். அங்ஙனேல், பெயர்த்தன்மையெய்தியதை உருபென்றதென்னையெனின், தன்பொருளிற் றீராமையானென முன்னரே உரைத்தாம்; ஆண்டுக் காண்க. நச்சினார்க்கினியரும் இச்சூத்திரவுரையில், பிறிதென்றது பெயரன்மைதோன்ற என உரைத்தனர். அவர் ஈண்டுப் பெயரென்றது சாத்தனது என்பதுபோல ஆறும்வேற்றுமையுருபின் பொருளையுடைத்தாய்நின்ற பெயரல்லாதவைகளை.

இன்னும் சாத்தனது ஆடை நல்லது என்றவிடத்துச் சாத்தனது ஆடை என்னுந் தொடர் சம்பந்தப்பொரு ளுணர்த்தி ஒருசொல்லாய்

நின்று பின் வினைகொண்டுமுடிந்தாற்போலவே, சாத்தனது நல்லது என்றவிடத்தும் சாத்தனது என்பது சாத்தனுடையதாயிருந்ததாகிய ஆடைஎன விரிந்துநின்று பின் வினைகொண்டுமுடிதலினானும் ஆறும் வேற்றுமையுருபே தன்னையேற்றுநின்றசொல்லோடுகூடித் தன் உடைமைப்பொருளிற்றீர்ந்து வினைக்குறிப்புப்பெயராயிற்று என்பது நுணுகி நோக்குவார்க்கு நன்கு புலனாம்.

இனிச் சாத்தனது என்பதுபோல வேற்றுமைப்பொருள்பற்றிக் குறிப்புவினைமுற்றுப் பிறத்தல் உண்டென்பது "அதுச்சொல் வேற்றுமை யுடைமை யானும்—கண்ணென் வேற்றுமை நிலத்தி னானும்" எனத் தொல்காப்பியனார் விதந்துகூறுதலா னறியப்படுதலின், சாத்தனது என்பது 'அதுச்சொல்'வேற்றுமைப்பொருளில்வந்து உடைமைப் பொருள் முன்னும் உடையது பின்னுமாக வரும் கோட்டது குழையது என்பது போலாது உடையது முன்னும் உடைமைப்பொருள் பின்னுமாகவந்த குறிப்புவினைமுற்றாகிச் சாத்தனுடையதாயிற்று எனப்பொருள் தந்து உருபேற்ற சாத்தனதுபோல நிற்குமென்பதூஉம், பின் அது பெயராய்நின்று உருபேற்குமென்பதூஉம் அக்காலத் துரையாசிரியர்களுக்கன்றி நூலாசிரியர்களுக்குங் கருத்தாதல் துணியப்படும்.

இதுபற்றியே ஆடை சாத்தனது என்பது சாத்தனது ஆடை என நின்றாற்போல "புருஷோராஜ்ஞ:; ராஜ்ஞ: புருஷ: என நிற்கும் என்றார் பிரயோகவிவேகநூலாரும்.

இன்னும், சாத்தனது, சாத்தன என்னும் வினைக்குறிப்புமுற்றுக்களை ஒருமையீறும் பன்மையீறுமாகக்கொள்ளுதல்போலவே அது உருபையும் அகரவுருபையும் முறையே ஒருமையுருபும் பன்மையுருபுமாகக் கோடலானும் இரண்டற்குமுள்ள ஒற்றுமை நன்கு புலப்படும். ஏனை வேற்றுமைகட் கங்ஙனங்கூறாமையும் ஈண்டு நோக்கத்தக்கது. அங்ஙனேல் வினையாலணையும்பெயரும் பெயருளடங்குதலின் வேறுகூறல் வேண்டாவெனின், அங்ஙனங்கூறினு மமையுமெனினும், உடைமைப் பொருளில்வரும் இதற்கும் ஏனைய பெயர்களுக்குமுள்ள வேறுபாடறிவித்தற்கு வேறுகூறினாரென்பது வினாவெதிர்வரும் வினாவும் செப்பாவடங்குமெனினும் வினாச் செப்பாதலாகிய வேறுபாடறிவித்தற்கு "வினாவுஞ் செப்பே வினாவெதிர் வரினே" என விதந்து கூறினாற்போல வென்பது.

இனி "ஆற னுருபு மேற்குமவ் வுருபே" என்பதற்கு முனிவருரைத்த உரையை ஆராய்வாம். அவருரை வருமாறு:—

அவ்வுருபு-எழுவாயாய்நின்ற அவ்வுருபே,—ஆறனுருபு மேற்கும்—ஐ முதலிய ஆறுருபுகளையும் ஏற்றுவரும் என்பது.

இவ்வுரையுள்; அவ்வுருபே என்பதற்கு அவ்வெழுவா யுருபென்று பொருள்கோடல் பொருந்தாது. ஏனெனின், மேற்கூறிய "பெயரே ஐ ஆல் குஇன் அதுகண்—விளியென் றாகு மவற்றின் பெயர்முறை" என்னுஞ்சூத்திரத்து எட்டுருபு மொருங்குகூறப்பட்டிருத்தலின் அகரம் எட்டையுஞ் சுட்டுமேயன்றிப் பெயரை வேறுபிரித்துச்சுட்டுத லதற்குக் கூடாமையின். இனி எழுவாயுருபு பிறிதுருபேற்குமென்றலும் பொருந்தாது. ஏனெனின்; எழுவாயுருபுபெயர்தோன்றுமாத்திரையேயாகலின் அது தன்பொருளிற்றீராதுநின்று பிறிதுருபேற்கமாட்டாமையின். பெயராய்நின்றேற்குமெனின்; பெயர் உருபேற்றல், "ஏற்கு மெவ்வகைப் பெயர்க்கு மீறாய்" எனவும், பெயர்வழித் தம்பொரு டாவரு முருபே" எனவும் மேற்கூறப்பட்ட சூத்திரங்களாற் கூறப்பட்டனவாதலின் ஈண்டுக்கூறல் கூறியதுகூறலாமாதலின் அதுவும் பொருந்தாது.

இனி ஆறனுருபென்பது ஆறாம்வேற்றுமையுருபென்று பொருள் படுவதன்றி ஆறுருபு என்று பொருள்படாது. ஏனெனின்; அன்சாரியை நிற்றலின்; தவிர்வழிவந்தசாரியையெனின், அதுவும் பொருந்தாது. ஏனெனில், அங்ஙனமாளுதற்கருத்து, ஆசிரியர்கட்கின்றாமாதலின். நன்னூலார், 'ஆறனொருமைக்கு'எனவும், "ஏழனுருபு"எனவும், "எட்டனுருபே"எனவும், தொல்காப்பியனார் "ஆறனுருபி னகரக்கிளவி" எனவும், "ஆறன்மருங்கின்" எனவும், "இரண்டன்மருங்கின்"எனவும், "ஆறனுருபினும்" இவ்வாறே பிறவுங்கூறுதலினானும் அவர்கட்கவ்வாறு ஆளுதற்கருத்தின்றென்பது பெறப்படும். நன்னூலார் ஆறுருபுகள் எனப் பொருள்கொள்ளவேண்டியவிடத்தெல்லாம், "இரண்டு முதலா விடையா றுருபும்—வெளிப்படவில்லது" எனவும், "முற்றீ ரெச்ச மெழுவாய் விளிப்பொருள்—ஆறுரு பிடையுரி யடுக்கிவை"எனவும், ஆறுருபு என்றே ஆளுமாற்றானும் அதுபொருந்தாமை யறியப்படும்.

இங்ஙனமே "ஆற னுருபு மேற்குமவ் வுருபே" என்னுஞ் சூத்திரத்திற்கு மயிலைநாதருரைத்தவுரைக்கு, முனிவருரைத்த மறுப்பும், அச்சூத்திரத்திற்கு அவருரைத்தவுரையும் பொருத்தமிலுரைகளாதல் தெளியப்படுதலின், மயிலைநாதருரையே பொருத்தமாதல் தெளிக.

சி. கணேசையர்.

# அநபாய குலோத்துங்கன்.

சேக்கிழார்நாயனுர் என்னும் பெரியார், அநபாய குலோத்துங்க னென்னும் சோழசக்ரவர்த்தியின் ஆட்சிக்காலத்தில், அவ்வேந்தனது அமைச்சர்தலைவராக இருந்தவரென்பதும், அவரே தம் அரசன் விருப்பப்படி பெரியபுராணமென்னும் திருத்தொண்டர்புராணத்தை யியற்றினரென்பதும், கொற்றவன்குடி உமாபதிசிவாசாரியரியற்றியுள்ள சேக்கிழார்நாயனுர்புராணம் என்ற நூலால் விளங்குவதாகும். மேற் கூறிய சேக்கிழார்நாயனுர்புராணம் பெரியபுராணத்தின் தலைப்பிற் சேர்த்துத் தொகுக்கப்பெற்றுள்ளது. சேக்கிழாரும் தாம் இயற்றிய பெரிய புராணத்திற் பல இடங்களில் தம் அரசனைச் சென்னி, அபயன், குலோத்துங்கன், அநபாயன், பேரம்பலம் பொன்வேய்ந்தோன் எனப் பல பெயர்களாற் சிறப்பித்துக்கூறியுள்ளார் எனினும், அவ்வேந்தனை அவர் பெரும்பாலும் அநபாயன் என்ற பெயராலேயே குறிப்பிட்டிருப்பதைப் பாக்கக் காணலாம்.

இனி, சிலாசாஸனங்களின்மூலமாக ஆராய்ந்துநோக்குமிடத்துக் குலோத்துங்கன் என்ற பெயருடன் பிரசித்தமாகச் சோழவரசர்கள் மூவர் இருந்தனரென்று தெரிகிறது. இந்த மூவேந்தர்களுள், பெரிய புராணத்தில் ஆசிரியர் சேக்கிழார் சிறப்பித்துக்கூறும் அநபாயகுலோத் துங்கன் என்னும் அரசன் யாவன் என்பதே ஈங்கு எடுத்துக்கொண்ட தாகும்,

பொதுவாக முதற்குலோத்துங்கனே அநபாயகுலோத்துங்க னென்று யாவரும் அபிப்பிராயங்கொண்டிருந்தனர். ஆனல் அந்தக் கொள்கைக்கு மாறுக ஸமீபகாலத்தில் சிலாசாஸன பரிசோதகர்கள் அநபாயகுலோத்துங்கன் என்பான் முதற்குலோத்துங்கன் அல்ல னென்றும், அவனது பௌத்திரனும் குமாரகுலோத்துங்கனென்று அழைக்கப்படுவோனுமான இரண்டாங்குலோத்துங்கனே என்றும் ஒரு முடிவுக்கு வந்துள்ளார்கள். அவ்வாறு அவர்கள் தீர்மானித்ததற்குக் காரணம், தஞ்சை ஜில்லா திருவாரூர்த் தியாகராஜஸ்வாமிகோயில்

இரண்டாவதுபிராகாரம் மேலைச்சுவரிற் காணப்படும் ஒரு சாஸனமேயாம். அந்தச்சாஸனம் "பூமன்னுபதுமம்" என்ற தொடக்கத்தை யுடைமையால் அது இரண்டாங்குலோத்துங்கன்சாஸனமென்றும் அந்தச் சாஸனத்தில் அநபாயன் என்ற பெயர் காணப்படுவதால் இரண்டாங்குலோத்துங்கனுக்கே அநபாயன் என்ற பெயர் இருக்கவேண்டும் என்றும் ஊகிக்கப்படுகிறது.

இனி யான் ஆராய்ந்த அளவில் அடியிற் குறிப்பிட்டுள்ள காரணங்களால் அநபாய குலோத்துங்கன் என்பவன் முதற்குலோத்துங்கனே யென்றும், இரண்டாங்குலோத்துங்கன் அல்லன் என்றும் தீர்மானிக்க இடமுண்டாகின்றது.

(1) செங்கற்பட்டுஜில்லா பல்லாவரத்திற்கடுத்த திரிசூலம் என்ற ஊரிலுள்ள தர்மபுரீச்வரர்கோயில் வடசுவரில், திரிபுவனசக்ரவர்த்தி கோநேரின்மைகொண்டான் என்னும் சுங்கந்தவிர்த்த குலோத்துங்க சோழனது 39-ம் வருஷத்தில் அவ்வேந்தன் முன்னலூர் என்ற கிராமத்திற்குத் தனதுபெயரால் திருநீற்றுச்சோழநல்லூர் எனப் பெயரிட்டு, அதை அந்தக் கோயிலுக்கு அளித்தான் என ஒரு சாஸனம் (312 of 1901) காணப்படுகின்றது. சுங்கந்தவிர்த்த குலோத்துங்கசோழன் முதற்குலோத்துங்கனே என்பது யாவரும் நன்கு அறிந்ததாதலின், முதற்குலோத்துங்கனுக்கு, திருநீற்றுச்சோழன், கோநேரின்மை கொண்டான் என்ற பெயர்களும் உண்டு என்பது இதனால் தெளிவாகும்.

(2) மதுராந்தகம் தாலூக்கா, திருவானைக்கோயில், திருவாலீச்வரர்கோயிற் சாஸனத்தில் (363 of 1911) திரிபுவனசக்ரவர்த்தி கோநேரின்மைகொண்டானென்னும் குலோத்துங்கசோழதேவன் 12-வது வருஷம், 293-வது நாளில் நென்மலை என்ற ஊருக்குத் திருநீற்றுச்சோழநல்லூர் என்று பெயர் வழங்குமாறுசெய்தான் எனக் காணப்படுகின்றது. அதில் அவ்வேந்தனது திருமந்திரவோலை (Royal Secretary) அநபாய மூவேந்தவேளான் எனக் குறிக்கப்பெற்றுள்ளது. ஆகவே இந்தச் சாஸனத்திற் காணப்படும் குலோத்துங்கசோழன்-திருநீற்றுச்சோழன், கோநேரின்மை கொண்டான் என்ற

பெயர்களையுடைய முதற்குலோத்துங்கனே என்பதும், அவனுடைய திருமந்திரவோலையாள் (Royal Secretary) அநபாய மூவேந்த வேளான் என்பதும் அறியலாகும்.

(3) மேலும், அதே வேந்தனது அதே நாளில் ஏற்பட்ட அவ்வூரி லுள்ள மற்றொருசாஸனம் (359 of 1911), அரும்பாக்கம் என்ற வூரை அவ்வேந்தன் அநபாயநல்லூர் எனப் பெயர்வழங்குமாறுசெய்தான் என்று குறிப்பிடுகின்றது. அந்தச் சாஸனத்திலும் திருமந்திரவோலை (Royal Secretary) என்னும் அதிகாரி, அநபாய மூவேந்தவேளான் என்றே குறிக்கப்பெற்றிருக்கிறது. மேலும், செங்கற்பட்டுத்தாலுக்கா களத்தூர்ச் சாஸனத்தாலும் (346 of 1911) இவ்விஷயம் வலி யுறுத்தப்படுவது காணலாம்.

சோழபரம்பரையில் அரசாங்கத்தில் உயர்ந்த அதிகாரிகளுக்கு அவ்வேந்தனது பெயரையே அவர்கள்பெயரின்முன் பட்டப்பெயராக வைத்துக்கொள்ள அளிப்பதுண்டு என்பதற்குப் பல சான்றுகள் காணலாமாதலால், அம்முறைபற்றியே மூதற்குலோத்துங்கனதுபெயர்க ளுள் ஒன்றான அநபாயன் என்ற பெயர் அவ்வேந்தனது திருமந்திர வோலை அதிகாரிக்கும் அளிக்கப்பெற்றிருக்கவேண்டும்.

(4) மேலும், கோயம்புத்தூர்ஜில்லா தர்மாவரம்தாலுக்கா, முத்தூரில் உள்ள சோழீச்வரர்கோயிலிற் காணப்படும் முதற்குலோத் துங்கனுக்கு முன் ஆண்ட சோழ அரசன் வீரராஜேந்திரதேவனது 4-வது வருஷ சாஸனத்தில் (165 of 1910) பெரிய நாச்சியார்கோயிலில் ஒரு திருவிளக்குவைக்கும்பொருட்டு உத்தமசோழப்பல்லவராயன் என்பவனது மைந்தர் ஒருவரால் ஏதோ ஒரு தொகை பணம் கொடுக்கப் பட்டதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

சேக்கிழாருக்கு ஆதியில் சோழமன்னன் ஒருவனால் உத்தம சோழப்பல்லவராயர் என்ற பட்டம் அளிக்கப்பட்டதென்பது முற்கூறிய சேக்கிழார்புராணத்தால் அறியலாகும். இதனால் சேக்கிழார்மைந்தர் ஒருவரே முதற்குலோத்துங்கனுக்கு முன் ஆண்ட வீரராஜேந்திரனது காலத்தில் இருந்தவராதலால் (அவரால் மேற்கூறிய தர்மம் ஏற்படுத்தப் பெற்றமையால்) அந்த வீரராஜேந்திரனுக்குப் பின் முதற்குலோத்துங்க

னே ஐம்பது வருஷங்களுக்கதிகம் ஆண்டிருக்க, முதற்குலோத்துங்கனது மைந்தன் விக்ரமசோழன், பிறகு அவன்மைந்தன் இரண்டாங் குலோத்துங்கன், இவர்களது ஆட்சிக் காலங்களிலெல்லாம் சேக்கிழார் வாழ்ந்துவந்து இரண்டாங்குலோத்துங்கனது காலத்திற்பெரிய புராணம் பாடியிருக்கவேண்டும் என்று கொள்வது பெரிதும் அஸம்பாவிதமாகும்.

ஆகவே பெரியபுராணத்திற் சேக்கிழார்கூறும் அநபாயன் என்பவன் முதற்குலோத்துங்கனே என்பதும், இரண்டாங்குலோத்துங்கன் அல்லன் என்பதும் விளங்கும். இனி மேற்கூறிய முதற்குலோத்துங்கனது 12-வது வருஷ சாஸனங்களிற் சில, தொண்டைமான் என்ற ஒருவருக்கு அரசன் எழுதிய கடிதமாகக் காணப்படுவதால் முதற்குலோத்துங்கனது ஆட்சியின் முதற்பன்னிரண்டுவருஷங்களுக்குள்ளேயே சேக்கிழார் பெரியபுராணம் பாடியிருக்கவேண்டும் என்று கருதவும் இடமுண்டாகிறது. ஏனெனில், சேக்கிழார் பெரியபுராணம் பாடியபிறகு, அமைச்சர் உத்தியோகத்தைவிட்டு நீங்கித் தில்லைநகரிலேயே தங்கியிருந்து தமது பிற்காலவாழ்நாளைக் கழித்துவந்து இறைவன் திருவடிநீழலையடைந்தார் எனவும், அவரது தம்பி பாலறுவாயர் என்பவரை வேந்தன் அமைச்சராகக்கொண்டு அவருக்குத் தொண்டைமான் எனப் பட்டப்பெயர் அளித்துச் சிறப்பித்தான் எனவும் சேக்கிழார்புராணம் கூறுவதால், மேல் எடுத்துக்காட்டப்பெற்ற முதற்குலோத்துங்கனது 12-வது வருஷ சாஸனங்களிற் காணப்படும் தொண்டைமான் என்பவர் சேக்கிழாருடைய இளையசகோதராகவே இருக்கலாம்.

மேற்கண்டகாரணங்களால், அநபாயன் என்பவன் முதற்குலோத்துங்கனே யென்பது தெளிவு. வடமொழியில் காவ்யாதர்சம் என்ற அலங்காரசாஸ்திரத்தையும், அதைத்தழுவிய மொழிபெயர்ப்பாகவே தமிழில் தண்டியலங்காரம் என்ற அணியிலக்கணத்தையும் இயற்றியருளிய ஆசார்யதண்டியென்றமஹாகவி மேற்கூறிய அவ்விரண்டு அலங்காரநூல்களிலும் அநபாயன் என்றவேந்தனது கோலும் சீரும் ஓங்குமாறு வாழ்த்தும்முறையிற் சிலசெய்யுட்களை உதாரணமாகக் காட்டியுள்ளார். அவ்விருநூல்களுக்கும் மூலமும் உதாரணமும் அவரே இயற்றினர்

என்பது, குருகூர்ச் சுப்பிரமணியதீக்ஷிதர் பிரயோகவிவேகம் என்ற நூலில் "தண்டியாசிரியர் மூலோதாரணங்காட்டினூற்போல யாமும் உரை யெழுதியதன்றி மூலோதாரணமுங் காட்டினும்.' என்று குறிப்பிட்டிருப்பதால் இனிது விளங்கும். ஆதலால், காவ்யாதர்ஸம் தண்டியலங்காரம் ஆகிய இருநூல்களையும் இயற்றிய ஆசார்ய தண்டியென்பவர் அநபாயன் என்னும் முதற்குலோத்துங்கன்காலத்தவ ரென்பதும், அவ்வேந்தனல் ஆதரிக்கப்பெற்றவரென்பதும் ஒருவாறு விளங்கும். [இந்தத் தண்டியலங்காரத்தைப்பற்றி விரிவாகத் தனியே பின்னர் விளக்குவாம்.] இது நிற்க;

உமாபதிசிவாசாரியர் இயற்றிய சேக்கிழார்நாயனர்புராணத்தால், பெரியபுராணத்திற்குச் சுந்தரமூர்த்திநாயனர் திருத்தொண்டத்தொகையும் நம்பியாண்டார்நம்பியின் திருத்தொண்டர் திருவந்தாதியும் முதல் நூல்கள் என்பது தெரிகிறது. சேக்கிழார் பெரியபுராணம் பாடியது முதற்குலோத்துங்கன்காலத்தில் எனத் தெரிவதால், நம்பியாண்டார் நம்பி அம்முதற்குலோத்துங்கனுக்கு முற்பட்டவராகவேண்டும். நம்பியாண்டாரும் திருமுறைகண்ட ராஜராஜனும் ஸமகாலத்தவரென்பது மேற்கண்ட உமாபதிசிவாசாரியரியற்றிய திருமுறைகண்டபுராணத்தால் அறியப்படுகிறது. முதற்குலோத்துங்கனுக்குமுன் முதல் இராஜராஜனைத்தவிர இராஜராஜன் என்ற பெயருடன் வேறு ஒரு சோழ மன்னன் இருந்ததாகத் தெரியவில்லை. ஆதலால் திருமுறைகண்ட ராஜராஜன் தஞ்சையிலிருந்து (985—1014) வரை ஆண்ட முதல் இராஜராஜனே என்பதும் சிலர் கருதுகிறபடி வேறு ஒருவனல்லன் என்பதும் தெளிவாகும்.

L. ஸ்ரீநிவாஸ ஐயர்,

தமிழ் ஆசிரியர், அரசாங்கக் கலாசாலை, கும்பகோணம்.

---

ஒரு நாட்டுப்புரத் தேவாலயமுற்றத்தில் எழுதப்பட்ட

# இ ர ங் க ற் பா.

("Elegy written in a country Church yard").

(கிரே (Gray) என்னும் ஆங்கிலப்புலவரா லியற்றப்பட்டது).

1 சயனமா மணியின் சத்தம் பகலின்சா மணியை நேர்ந்த
தியலுறு புலத்தி லேய்ந்த தொறுக்கண்மென் மெலவே மீண்ட
வுயர்வுறு மேழிச் செல்வ னயர்வொடில் வழியை யுற்றான்
நயமிகு முலகந் தன்னை யிருளுக்கு மெனக்கு நல்கி.

2 மங்கியே தோன்றுந் தேசக் காட்சியு மறைய லுற்ற
திங்கிளங் காலும் வீசா தமைதியுற் றதுவா லேசில்
துங்கமா ரளிக்கூட் டத்தின் சூழ்சிறை யோசை தூரத்
தங்குறை தொழுவி னூடே துயிலுமான் மணிமெல் லோசை.

3 வல்லிகள் பின்னிச் சூழ்ந்தே வயங்குசீர்க் கோபு ரத்தின்
எல்லையி லிருந்தே தூங்கு மாந்தைதன் னிடத்திற் சேர்வார்
தொல்லியற் றன்ன தாணை தன்னையே தொலைத்த றன்னை
நல்லியற் சசியினுக்கு நவிழுரு மோசை மிக்க.

4 பொரியரை ஞாழற் கீழும் பூமலி வாகைக் கீழும்
மருவியே செடிகள் சூழ்ந்து வயங்குபாழ் நிலைய வாகித்
தெரியுமிச் சிறிய கல்லி னறைதொறு மிந்த நாட்டிற்
குரியரா மூட முன்னோ ருறுதுயில் பொருந்து கின்றார்.

5 இத்துயி லுடையோர் தம்மை யின்னறுங் காலைக் காலின்
சித்திர வழைப்பு மில்லத் தலந்தொறுஞ் செறியுந் தாழ்வா
ரத்தினிற் குரம்பை வாழு மடைக்கலா னொலியும் வார
ணத்தின்கூக் குரலு மங்கொம் பொலியுந்தா னெழுப்ப மாட்டா.

6 இங்கிவர்க் காகத் தீயு மினியெரிந் திடவே மாட்டா
தங்குறை மனையா டானு மரும்பணி யியற்றா ளின்னோர்
பங்கமில் வருகை பார்த்தே தனையரார் முத்தம் வேண்டித்
தங்களின் மாறு கொண்டே தாளினு மேற மாட்டார்.

7 பன்முறை யிவர்கு யத்தான் மாய்ந்தவும் பலவே பைங்கூழ்
பன்முறை யிவர்தம் மேழி யுழுதவும் பலசெ யாமால்
என்னநல் லின்பந் தன்னோ டிவர்தம திணைகள் சாய்ப்பார்
என்னநல் லழகு தன்னோ டிவர்கையான் மரங்கள் வீழும்.

8 செம்மைகொ ளதிகா ரத்தின் பிரியராய்ச் சிறந்தா ரின்னோர்
தம்மியற் றொழிலை யில்லி னின்பத்தை நியமந் தன்னை
வெம்மையி னிகழ வேண்டா மேன்மையுற் றுள்ளா ரின்னோர்
செம்மையில் சிறிய காதை நகைப்பொடு கேட்டல் வேண்டா.

9 வழிவழி யாக வந்த கீர்த்தியுஞ் சுகமுஞ் சீரார்
களிமிகு பலத்தி னுடம் பாமுநற் கவினு மெல்லாம்
மொழிபெறு கால வெல்லை யிடைப்பட்டு முடிப வந்த
விழுமிய மேன்மை யெல்லாங் கல்லறை வழியே காட்டும்.

10 மேலதாம் பெருமை மிக்கீர்! மணியிசை பகர்ந்து போற்ற
ஆலயச் சாலை யூடு மழகிய வில்லை நேரும்
வேலைப்பாட் டிடங்க டோறும் விளங்குப வாகிக் கீர்த்தி
யேலவே பொறித்த லில்லா ரெனவலர் தூற்றல் வேண்டா.

11 சிமுத விடைமட் டாகத் தீட்டுசித் திரவ மைப்பும்
வரம்பறு கீர்த்தி யாவும் வரைதரு மாண்பு மந்தத்
திரம்பெறு தலையு நீர்மை சேர்தரு மாவி தன்னைத்
திரம்பெறு நிலைய வாக்குஞ் சீரிய வுடைய வாமோ?

12 சிறந்தகண் ணியத்தி னோசை சீர்மிகு சாந்த மென்னும்
திறம்பெறு பொடியா மித்தைத் தெருட்டவும் வல்ல தாமோ
மறந்தபு முகமன் வார்த்தை சாவெனு மிதன்பா லேய்ந்தே
செறிந்திடு புலமி லாத செவியையுந் தேற்ற வற்றோ?

13 புறக்கணிப் புடைபதாகப் பொருந்துமிவ் விடத்தே யுள்ளோர்
சிறப்புறு மறிவின் மிக்கோ ராதலுங் கூடுஞ் செங்கோன்
முறைப்படி தாங்கற் கேற்ற மொய்ம்புடை யாரு மாவர்
திறப்படு வீணை கானத் திறலுளோர் தாமு மாவர்.

14 எங்கிலை யுற்று ரேனு மிவர்கரு விழிமுன் பாக
நன்மைசேர் ஞானந் தன்பான் மருவுசி ரிதழின் பக்கந்

தன்னையோர் போதி லேனும் விரித்தில தின்னோர் தம்பாற்
றுன்னுநன் னேரம் வீணே தொலைதலை யஞ்சிப் போலும்.

15 வெவ்வியன் மேவும் பொல்லா மிடியெனு மது தா னின்னோர்
எவ்வமில் லாத சீர்சா லியல்பினைத் தகைந்தே பின்னும்
இவ்விய லுடைய மாந்த ரினியநல் லுயிரின் மேலாஞ்
செவ்விகொள் வளர்வி னோட்ட மதனையுஞ் செறித்த தன்றே.

16 இளவெயி லெறிக்குஞ் சோதி யிருளிடை மறைய நீல
நளிகட லாழத் துற்ற நன்மணி பலவே யாமாற்
குளிர்செறி கானந் தன்னிற் கோலமோ டலர்ந்து வாசம்
வளிதனிற் செறிய வாடி வீழ்வபன் மலர்க ளாமால்.

[தொடரும்]

ந. பத்மாவதி.

---

உ

# அன்பினைந்திணை.

[கண்ணபுரத்துக் கவுணியன் வெண்ணாய்க்கண்ணன் பாடியது].

## நெய்தல்.

கதிரு மெலிந்து கருங்கடல் வீழ்ந்த
திருட்டுச் சிறையி னெற்கதிர் பட்டாங்
காங்காங் கமைகுந வாரொளி விளக்குகள்
சிறையமை காவற் றெறுநெஞ் சாளனிற்
கொண்டலவ் விளக்கைப் பொருதுகுலைக் கின்று
தன்னமர் கதிர்ச்சேய் தாக்குறற் காற்றுக்
கடலு மலைக்கை யான்மார் பறைகின்று
வந்த வங்கம் வறிதுநீஇ யசைஇ
நொந்தழு மாபி னோன்றிரைப் பட்டன்று
பறவை முதலிய வஞ்சியிற் பதுங்குந
கழிமலர் பூக்கள் காற்றலைப் பெய்தி
மாசு படீஇ மழுங்கி யுலைகுந

வானூர் திங்களு மழையிடை மறைஇ
யகக்கறுப் பெய்தி யலைந்தன்று மன்னே
நாளுங் கோளு நல்லொளி யுடுவும்
வாளொளி மழுங்கி வாடித் துயர் வாய்ந்த
வெவன்கருதி யம்மா வின்னவை யெல்லாந்
தவவெழி னலன்முதல தாமறத் துயர்க்கடற்
பட்டாங் கினைகுந பறைகிலிப் பாரே
நெட்டுயிர்ப் புயிர்த்து நீள்விழி கலங்கித்
துன்பநீர் பெருக்கிக் கடலென வாக்கி
யுண்ணீர் மாறி யொளிகுறைந் துழன்று
சாம்பிக் கூம்பித் தளர்ந்தெனச் சாற்றிற்
புனைந்துரை யாங்கொல் பொருந்துவ தியாங்ஙன
மீதுபொய் யுரையே யிருவிழி படைத்தாய்
நின்கண் டுடைஇ நுனித்து நோக்கிற்
கல்லமை நெஞ்சுங் கரைந்துகல் காண்குவை
யொளிதரு விளக்குப் பொறிமுதல் பழுதுறி
னூர்விளக் கெல்லா முடன்பழு துறவி
னிவைதமக் கெல்லா மினியநலத் தரூஉ
மொருமுதற் கிடுக்க ணுற்றதொன் றுண்டுமன்
யாறுவறந் தாங்கு விளைவயல் வறப்பதி
னிவைதமக் கிங்ஙன மெய்தற் கொருமுதல்
வறப்புண் டென்பதூஉம் வாய்த்தா கும்மே
ஆங்குச்
செய்மையிற் குழலிற் றுயரஞ் செப்பலி
னோரொலி நெஞ்சை யுருக்கிக் கரைக்கின்
றவ்வொலி செய்யு மதுவே யுயிர்த்துக்
கருங்கட னோக்கிக் கப்ப னோக்கிக்
கலங்கரை விளக்கைக் கறுப்புட னோக்கி
வானை நோக்கி மழைத்துளி நோக்கித்
துளிசெய் கொண்டலைத் துயரொடு நோக்கிக்
குழைச்சுவ ரிருட்டுக் கூற்ற நோக்கி
யிருட்டிற் சிவந்தெழுந் திலகி வெளுத்த

தண்ணொருப் பாகுந் திங்க ணோக்கித்
தன்னமை மேனியு மாடையு மணியும்
பின்னர் நோக்கிப் பெரிது புலந் தேங்கி
யொன்றன் பின்ன ரொவ்வொன் றாகக்
களைஇச் சினந்து கதுமென வீசின்று
வங்க மவரை யழைத்துவந் திலைநீ
யீங்குமன் னெனினு மாங்கெனைக் கொடுசெலாய்
திங்கா ளவரிருப் பியம்பிலை யெனினு
மின்னனனி யெய்திய வெளியெனை யாண்டுக்
கதிர்க்கை பற்றிச் சேர்த்திடாய் சிறகெனக்
கிருப்பி னின்னே பறந்தவ ணெய்துவென்
மழையிடை மின்னு வாய்துவ னெனினே
வான்மிசை யூர்ந்து மேவியவண் மின்னுவெ
னவர்மனந் திருப்பு மாற்றலுற் றேனெனி
னுஅ யாஅ னடையுமின் பெற்றெற்
றென்றுங் குன்னு மேங்கி யினைந்தழூஉங்
காற்றுப் படுமுன் கறுப்புக்கொண் டெதிர்க்கு
மையே பலவெனை யலைக்குந விரைந்து
வந்தெனைக் காக்கென வணங்கிப் போற்றும்
வந்தனை நன்றெனும் வந்திலை யேயெனும்
விளையாட் டயர்குதி கொல்லோ வென்னும்
புனைந்திலெ னென்னும் புனையே னென்னும்
பூசிலெ னென்னும் பூசே னென்னு
முண்டிலெ னென்னு முண்ணே னென்னுந்
துயின்றிலெ னென்னுந் துயிலே னென்னும்
வரினு நின்னொடு வழங்கே னுரையெனும்
புலக்கு நகைக்கும் பொருமிக் கண்ணீ
ருகுக்குஞ் செத்தென வுயிர்க்கா தொடுங்கு
முயிர்த்தெனப் பின்னரு மெழுந்தாங் குலையு
மென்னே யிதனி னியற்கை
பொன்னே யென்னுயிர்ப் புத்தமு தோயே.

இது, பொருள்வயிற் பிரிந்துபோன தலைமகன் இதுபோது வருவேன் என்று குறித்துச்சென்ற காலம் அறக்கழிந்துபோயும் வாராமை காரணமாக இரக்கமேலிட்ட தலைமகளது காமமிக்க கழிபடர்கிளவிகளைக்கேட்ட பிறிதொரு தலைமகள் தனதுதலைமகளுக்கு அன்னவள்படுந் துயரை எடுத்துக்கூறநிற்பது.

[தொடரும்]

ஸ்ரீ:

# கம்பரைக் கற்கும் முறை.

ஸ்ரீமான். பி. ஸ்ரீ ஆசாரியர் எழுதுவது.

## தோற்றுவாய்.

ஒரு நாட்டின் உண்மைச்செல்வம் பொருட்செல்வமன்று. பொருட்செல்வத்தினுஞ் சிறந்த பெருஞ்செல்வம், உயர்தர எண்ணங்களும் கொள்கைகளும் பொதிந்துள்ள காவியங்களும் பெருநூல்களுமே யாகும். 'கவிகளை மறக்கும் மக்கள் தாமும் மறக்கப்பெறுவர்' என்று பேரறிஞரொருவர் கூறியுள்ளார். உண்மைக்கவிகள் அருள்கூர்ந்தளிக்கும் இன்பம் இவ்வுலகிலேயே நாம் அறிந்தனுபவிக்கும் பேரின்பமாகும். இவர்களுள்ளம் செல்லாதஇடம் இல்லை. 'புகைபுகாவாயிலும் புகுந்து நோக்கிய' அனுமனைப்போற் கவியுள்ளமும் காற்றினும் புகையினும் கலக்கும்; அணுவின் நுணுகும்; மேருவின் வீங்கும்; 'பூத்தொறும் வாவிச் செல்லும் பொறிவரிவண்' டெனச் சென்று பாரிலும் வானிலும் பயிலும் அழகுச்செல்வங்களையெல்லாம் கவர்ந்து செய்யுண்மணிகளிற் றிகழ்வித்துக்காட்டும். ஆயாசமின்றி நாடும் காடும் கடந்து கடலோடிக் குறவரும் மருளும் மலைமீது பாய்ந்து வானவீதியிலும் கூரெனக் கடிது செல்வது கவியுள்ளம். உடனே விண்ணுலகினின்று மண்ணுலகிற்கும் மண்ணுலகினின்று நாகருலகிற்கும் இறங்கிவந்து காண்டற்கரிய அற்புதங்களையெல்லாம் செவிக்கினிய செஞ்சொற்களாற் சித்திரிப்பதும் கவியுள்ளமே. புறவுலகிற் சஞ்சரிப்பதுபோலவே மக்கள் தேவர் அரக்கர் ஆதியோரது அகவுலகிலும் சென்று சேர்ந்து புத்தப்புதியகாட்சிகளைக் கண்டுவரும் பேராற்றலும் கவியுள்ளத்திற்கு உண்டு. பழையவுலகோடு புதியவுலகினை இணைப்பதும் கவியுள்ளமே; தற்கால வுலகினர்க்கு எதிர்கால மகோன்னத நன்னிலை காட்டி மகிழ்விப்பதும் கவியுள்ளமே; அறி

வுத்தெய்வமும் அழகுத்தெய்வமும் கைகோத்துக் களிநடம்புரியும் மணிமன்றம் கவியுள்ளமேயன்றோ?*

உலகம் போற்றும் மஹாகாவியங்களையருளிய மகாகவிகள், நாமகளின் பேரருளுக்கிலக்கான வரகவிகளென மதிக்கப்பெறுகின்றார். இத்தகையமகாகவிகள் மூவரென மேலைநாட்டினர் கூறுவதுண்டு. அவர் ஹோமர், விர்ஜில், மில்டன் எனப் பெயர்பெறுவர். நிலமாமகள் விரும்பியணியும் மகாகவிமாலையில் ஒருங்குவைத்தெண்ணப்படும்பெருஞ்சிறப்பு, இந்தியாவின் ஆதிகாவியமாகிய இராமாயணமியற்றிய வான்மீகர்க்குண்டென்பது திண்ணம். எத்தனை நூற்றாண்டுகளாக இராமாயணமும் மஹாபாரதமும் இந்துமக்களுக்கு ஊக்கத்தையும் உற்சாகத்தையும் சமயவுணர்வினையும் உலகஅறிவினையும் அளித்துவந்திருக்கின்றன! இராமபிரானது வீரத்திருக்கதையைவெளியிடும் வான்மீகரின் கவிவனப்பினை, நமது கவிச்சக்கரவர்த்தியாகிய கம்பர்,

"வாங்கரும் பாத நான்கும் வகுத்தவான் மீகி யென்பான்
தீங்கவி செவிக ளாரத் தேவரும் பருகச் செய்தான்"

என்று பாராட்டிக் கூறியுள்ளார். "கற்பார் இராமபிரானையல்லால் மற்றுங்கற்பரோ" என்ற ஆழ்வார் திருவாக்கு, வான்மீகராமாயணங் கற்பதில் அந்நாளிலே தமிழ்மக்களுக்கிருந்த

---

*Compare :—

The lunatic, the lover and the pact
Are of imagination all compact:
One sees more devils than vast hell can hold,—
That is the mad man: the lover, all as frantic,
Sees Helen's beauty in a brow of Egypt:
The poet's eye, in a fine frenzy rolling,
Doth glance from heaven to earth, from earth to heaven;
And as imagination bodies forth
The forms of things unknown, the poets' pen
Turns them to shapes, and gives to airy nothing
A local habitation and a name.

*Shakespeare's A midsummer-night's Dream.*

பேரவாவினை ஒருவாறு வெளியிடுகின்றது. "மதுர இராமாயணகதை யுரைசெய்த வான்மிகபகவனும்" என்று சேக்கிழார்புராணம் பாடியருளிய—சந்தானசாரியர் நால்வருள் ஒருவராகிய—உமாபதிசிவாசாரியர், வான்மீகமுனிவரது மதுரவாக்கினைச் சிறப்பித்துக்கூறியுள்ளார். இராமாயணமாதிய பெருங்காவியங்கள் நமது பண்டைப் பெருமையின்சாசனமாகவும் எதிர்காலவளர்ச்சிக் குரியவித்தாகவும் விளங்குகின்றன.

இற்றைக்குச்சற்றேறக்குறைய ஆயிரம்ஆண்டுகட்குமுன், கம்பர் தமிழில் இராமாயணம் இயற்றி, 'இராமாயணமென்னும் பத்திவெள்ளங்குடிகொண்டகோயில்' என்று அந்நாளிலே கருதப்பெற்றிருந்த அரங்கநாதன் சந்நிதியில் அரங்கேற்றினர். "எண்ணியசகாத்தமெண்ணூற்றேழின்மேல்" என்றுசொல்லப்பட்ட அக்காலந்தொட்டு இன்றளவும் காவியவுலகின் தனிநாயகமாக மதிக்கப்பெறுவது கம்பராமாயணம்.

"..............................கற்றவர் கற்றிலாதவரும்
உண்ணும் நீரினும் உயிரினும் அவனையே உவப்பார்"

என்று கம்பர் தமது காவியநாயகனது குணாதிசயத்தை வசிட்டமுனிவர்வாயிலாக வெளியிடுகின்றார். இத்தகையபெருமை கம்பரது பெருங்காப்பியத்துக்கும் தமிழகத்தில் உண்டென்பதற்கு ஒருசிறிதும் ஐயம் இல்லை. கற்றாரும் மற்றாரும் ஒருங்கே பேரின்பந்துய்க்கும்நிலையிற் கம்பர் தமது வீரகாவியத்தை அமைத்துள்ளார்.

"இம்பர் நாட்டிற் செல்வமெலாம்
எய்தி யரசாண் டிருந்தாலும்
உம்பர் நாட்டிற் கற்பகக்கா
ஒங்கு நீழ லிருந்தாலும்
செம்பொன் மேரு வனையபுயத்
திறல்சேர் இராமன் திருக்கதையிற்
கம்ப நாடன் கவிதையிற்போற்
கற்றோர்க் கிதயம் களியாதே"

என்பது தமிழகம் கம்பருக்குத் தந்த மதிப்புரையாகும். தமிழறிஞர் காவிபவரம்பாகிய கம்பராமாயணத்தினை ஓதியும் உபந்யசித்தும்

ஆராய்ந்தும் ஆநந்தம் எய்தினர்; எனினும் கம்பரது காவியநயத்தினை நம்மக்கள் இன்னும் நன்குணர்ந்துகொள்ளவில்லை யென்று துணிவது இழுக்காகாது. காரணமென்னை? இவர்கள் தனிக்கவிகளை எடுத்தாராய்கின்றார்; தங்கள்திறமை வெளிப்படுமாறு செய்யுளைச் சின்னபின்னஞ் செய்து பலபொருள்காட்ட முயல்கின்றார். 'தனிமரங்களை நோக்குவோர் கானகம் காண்பதில்லை'யென்னும் உண்மையினை இவர் அறியார். புராண முறையிற் கம்பராமாயணப்பிரசங்கஞ்செய்வோர் கதைப்போக்கை மட்டுமே கவனிக்கின்றார். பண்டிதர்முறை, பௌராணிகர்முறை என்னும் இரண்டிலும் உண்மையான காவிய ஆராய்ச்சிமுறை நன்கு வெளிப்படுவதில்லை. காவியஅமைப்புமுறைகளைக்குறித்து மேலை நாட்டு மேதாவியர் ஆராய்ச்சிசெய்துவந்திருப்பதுபோல் இந்நாட்டிலுள்ள இலக்கணஆசிரியர்களும் பிறரும் ஆராய்ச்சிசெய்யவில்லையென்பது எமது கொள்கை. இலக்கணத்தின் பல்வேறுதுறைகளிலும் ஆராய்ச்சி செய்துவந்த நம் முன்னோர் காவியஇலக்கணத்தைக்குறித்தும் அதன் நன்னயமுற்றும் உணரும்முறைகளைக்குறித்தும் விரிவாக ஆராயத் தவறிவிட்டனரென்பது வியக்கத்தக்கதாகவேயிருக்கிறது. பெருங் காப்பியத்தில் எத்தகையபொருள் அமைக்கப்பெறல்வேண்டுமென்பது குறித்தெழுந்த இலக்கணம் ஒரு அட்டவணையாகவே விரிகின்றது. காவியத்தின் கட்டுக்கோப்புமர்மங்களைப்பற்றிய ஆராய்ச்சி நம்நாட்டிற் செய்யப்படவில்லை. மேலைநாடுகளில் அரிஸ்டடல்காலம்முதல் இன்றளவும் காவிய ஆராய்ச்சி நன்கு நடைபெற்றுவருகின்றது. இத்தகைய ஆராய்ச்சிமுறைகளை நாமும் கைக்கொண்டு இலக்கியத்துறையை வளமுறச்செய்தல்வேண்டும். எனவே கம்பரைக்கற்கும்முறையில் அடிப்படையான மாறுதலொன்று அமைத்துக்கொள்வது அவசியமாகுமென்பதை இங்கே குறிப்பிடவிரும்புகிறோம்.

## புதிய ஆராய்ச்சிமுறை.

இத்தகைய மாறுதலைக்குறித்துப்பேசுவதற்குமுன் மேலைநாட்டு மேதாவியரது காவிய ஆராய்ச்சிமுறையின் சாராம்சம் இன்னதென்று ஒருவாறு கண்டுகொள்வது இன்றியமையாததாகும். காவியமென்பது பல்வேறு உறுப்புக்களோடு இலங்கும் ஓர் உயிருடைப்பொருளையொத்திருப்பதென்றும், ஒவ்வோருறுப்பும் முன்னும் பின்னுமுள்ள உறுப்புக்

களோடு இசைந்து ஒன்று என்னும் உணர்ச்சியினை வளர்க்கவேண்டு மென்றும் மேலைநாட்டு ஆராய்ச்சியாளர் ஒருமுகமாகக்கூறுகின்றார். தனித்தனிப்பகுதிகளில் உள்ள கவியின்பத்தோடு ஒருபகுதிக்கும் மற்றொருபகுதிக்குமுள்ள பொருத்தமும் அழகுற அமைதல்வேண்டும். இத்தகைய இன்பத்தோடும் அழகோடும் பொலிந்திலங்கும் காவியம் ஒரு தனிப்பிண்டமாக அமைதல்வேண்டும். பல்வேறு உபகதைகள் அல்லது உபாக்கியானங்கள் ஒரு காவியத்திற் காணப்படுதல் கூடும்; எனினும், அவை காவியத்தின் உயிர்நிலையாகிய முக்கியநிகழ்ச்சி அல்லது மத்தியசம்பவத்திற்குத் துணைபுரிதல்வேண்டும். குறித்த உபகதைகள் ஆதியவை மத்தியசம்பவத்தின் வித்தாகவாதல் விளைவாகவாதல் அமைதல்வேண்டும். மத்தியசம்பவத்திற்கே அழகுதந்து அயல் ஒதுங்கி நிற்கும் உபாக்கியானங்களும் பிறவும் காவியங்களிற் காணப்படுவதுண்டு; எனினும் உபாக்கியானங்களாதிய புறவணிகள் அதிகமாக அளவுகடந்து காணப்படுவது காவிய இலக்கணத்துக்குப் பொருத்தமுடையதன்று. உள்ளுறுப்புக்களாக அமைந்து மத்தியசம்பவத்தோடு ஜீவசம்பந்தம் பெற்றுள்ள காவியவுறுப்புக்களே மகாகாவியத்திற்கு இன்றியமையாத பகுதிகளாகக்கருதப்படுகின்றன. காவிய அமைப்பு முறையினை ஒரே வார்த்தையில் அல்லது சொற்றொடரில் அமைத்துக் கூறவேண்டுமெனின், அதனை நாம் 'கவிச்சிற்பத்திறமை' என்ற சொற்றொடராற் குறித்தல் கூடும்.

கல்லையும் மண்ணையும் பொன்னையும் மணியையும் கொண்டு தேர்ந்த சிற்பியொருவன் மனோகரமான மாளிகை அமைக்கின்றான். அவ்வண்ணமே மகாகவியும் தன் சொல்லை யிசைத்துச் சுந்தரமான காவிய மாளிகையினை நிர்மாணஞ்செய்கின்றான். இக்கருத்தினை,

> "சந்தி பொருத்தித் தருஞ்சீர் கெடாதடுக்கிப்
> புந்தி மகிழ்றப் புதவணித்தா—முந்தையோர்
> செய்யுள்போற் செய்த திருக்கோயில்"

என்னும் வெங்கைபுலா அடிகளும் வலியுறுத்தல் காணலாம். சிற்பச் செல்வத்திற்குப் பெயர்போன தாஜ்மஹால் கல்லாலும் மணியாலும் சமைந்ததோர் காவியமேயன்றோ! அவ்வண்ணமே கவிச்சிற்பத்திறமைக்குப் பெயர்போன மகாகாவியமும் ஒரு மாளிகையாக அமைதல்

வேண்டும். கற்குவியல் கட்டடமாகாது; தனிக்கதைகள் அல்லது உபாக்கியானங்களின்சேர்க்கையும் காவியமாவதில்லை. கட்டடங்களில் எத்தனைவகைகள் இருக்கின்றன! அவ்வண்ணமே காவியமாளிகைகளும், கவிஞர்பெருமக்களின் மனோதர்மத்திற்கேற்றவாறு பலவகையாக நிர்மாணஞ்செய்யப்பெறுகின்றன. ஆனால் மனைபென்னும்பெயர்க்குரிய மரபுகள்மட்டும் போதுமா? சிற்பத்திறமையோடு அழகுவிதிகளுக்கிணங்க அமைக்கப்பெறுங் கட்டடங்களே மக்களது சௌந்தர்யவுணர்வினுக்குத் திருப்திதருகின்றன. இங்ஙனம் ரஸிகரது நல்லுணர்வினுக்கு இசைந்து அமையும் காவியமே, புவியினுக்கு அணியாக விளங்கும் காவியமாளிகையாகும். மகாகாவியமாளிகைகளின் அமைப்புமுறை அல்லது சிற்பத்திறமை ஆராய்ச்சியாளராகிய ரஸிகர்க்குப் பெருவிருந்தன்றோ?

இக்கொள்கையினை அளவுகருவியாகக்கொண்டு நமது காவியங்களை ஆராய்வதே முறை. தனிப்பகுதிகளைநோக்குவதோடு கட்டட அமைப்பினைக்குறித்தும் விசேடஆராய்ச்சிசெய்வது இன்றியமையாதது. அப்பொழுதுதான் மகாகாவியங்களின் அருமைபெருமைகள் உள்ளவாறு புலனாகும். இத்தகைய ஆராய்ச்சிமுறையினை ஓர் பற்றுக்கோடாகக்கொண்டு கம்பரது கவியுள்ளங்கண்டு களிக்கமுயல்வதே கம்பரைக்கற்கும் முறை. சென்ற ஆயிரம் ஆண்டுகளாகக் கம்பரைக் கற்றுவரும் தமிழ்மக்கள், மேலைநாடுகளில் வெளியிடப்பெற்றுள்ள புதியமுறைகளிலும் பயிற்சிபெற்று நூலாராய்ச்சிசெய்யமுற்படுதல்வேண்டும்.

> "எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
> மெய்ப்பொருள் காண்ப தறிவு"

என்பது தமிழர் பொதுமறை.

கம்பராமாயணங்கற்போர் தனிச்செய்யுண்மணிகளின் பெருமையினை மதிப்பிடுவதோடு முழுநூலையும் ஒருங்குநோக்குதல்வேண்டும். ஆங்காங்கேயுள்ள இன்கவிகளைத் திரட்டி ஆராய்வதோடு, ஒவ்வொரு பகுதியினையும் கம்பர் எவ்வாறு பொருந்த அமைத்துள்ளார் என்று நோக்குதல்வேண்டும். கதைப்போக்கினை நோக்குவதோடு, காவியத்தின்முக்கியநிகழ்ச்சிக்குப் பல்வேறுபகுதிகளும் எவ்வாறு துணைசெய்கின்றன என்பதையும் நன்கு ஆராய்தல்வேண்டும். பெரும்பகுதிகளும்

சிறுபகுதிகளும் காவியத்தோடு அவயவசம்பந்தம் பெற்றுள்ளனவா? ரஸிகர்களுடைய சௌந்தர்யவுணர்விற்கும் அழகுவிதிகளுக்கும் இணங்க முழு நூலும் அதன் பகுதிகளும் அமைந்துள்ளனவா? என்னும் இத்தகையவினாக்களையெழுப்பி விடைகாணமுயல்வது காவிய ஆராய்ச்சி முறையாகும். இம்முறையினைப் பின்பற்றி இத்துறைகளில் தமிழறிஞர் உழைத்துத் தமிழிலக்கிய ஆராய்ச்சி செய்தல்வேண்டும்; கம்பராமாயணம்போன்ற பெருங்காப்பியங்களை நன்கு ஆராய்ந்து மதிப்பிடுதல் வேண்டும்.

## கம்பராமாயண அமைப்பு.

இங்ஙனம் ஆராயுமிடத்து, முதற்கண் கம்பராமாயணத்தின் பெரும் பகுதிகளான காண்டங்களின் அமைப்பு, காவிய அமைப்போடு எத்தகைய தொடர்புடையதென்பது கவனிக்கத்தக்கது. அயோத்தியா காண்டத்திலேதான் இராமாயணத்தின் முக்கியநிகழ்ச்சிக்குரிய அடிப்படை அமைக்கப்பெறுகின்றது. இராமாயணமென்னும் அற்புத மாளிகையோடு ஜீவசம்பந்தமுடைய முதற்பெரும்பகுதி அயோத்தியா காண்டமே. கம்பராமாயணத்தின் மத்தியசம்பவம் அல்லது முக்கிய நிகழ்ச்சி இராவணவதமாகும். இராமாயணத்துக்கு இராவணவதம் என்று ஒரு பெயரும் உண்டு; சீதையின் பெருங்கதை என்ற பெயரும் உண்டு.

"விரிந்திடுதீ வினைசெய்த வெவ்வியதீ வினையாலும்
அருங்கடையின் மறையறைந்த அறஞ்செய்த அறத்தாலும்
இருங்கடகக் கரதலத்திவ் வெழுதரிய திருமேனிக்
கருங்கடலைச் செங்கனிவாய்க் கௌசலையென் பாள்பயந்தாள்"

"அறந்தலை நிறுத்தி வேதம்
அருள்சுரந் தறைந்த நீதித்
திறந்தெரிந் துலகம் பூணச்
செந்நெறி செலுத்தித் தீயோர்
இறந்துக நூறித் தக்கோர்
இடர்துடைத் தேக மீண்டுப்
பிறந்தனன் தன்பொற் பாதம்
ஏத்துவார் பிறப்ப றுப்பான்"

இங்ஙனம் தீயோரை வேறுத்துத் தக்கோரிடர் துடைத்து அறம் தலைநிறுத்தவந்த இராமபிரானுக்கு வாழ்க்கைத்துணையாக அமைந்த சீதாபிராட்டியின்கதையே இராவணவதத்திற்கு இன்றியமையாததாகும். 'மீன்சுடர் விண்ணும் மண்ணும் விரிந்தபோராக்கரென்னும்—கான்சுட முளைத்த கற்பின் கனலி' யாகிய சீதாபிராட்டியை இராவணன்சந்தித்தது இராவணவதத்துக்கு நெருங்கிய காரணமாக அமைகின்றது. சீதையும் இராமனும் நகர்நீங்கிக் கான்புகுவதுதான், சீதையை இராவணசந்யாசி சந்தித்ததற்குக் காரணம். எனவே இராவணவதமென்னும் முக்கியநிகழ்ச்சிக்குரியவித்து, இராமன் சீதையோடு நாடிறந்து காடுசெல்வதாகும். இவ்விதை அயோத்தியாகாண்டத்திலேதான் விதைக்கப்படுகிறது. இந்நிகழ்ச்சியிலிருந்து இராமாயணம் மேலோங்கி வளர்கின்றது. இந்நிகழ்ச்சிக்குக் காரணமாகநின்று விதியின் விசித்திர கதியினைத்தூண்டுபவள் கூனியாவள்.

"இன்னல்செய் யிராவண னிழைத்த தீமைபோற்—றுன்னருங் கொடுமனக் கூனி தோன்றினள்" என்று கம்பர் காவியத்தின் மத்திய சம்பவம் அல்லது முக்கியநிகழ்ச்சியினை நினைப்பூட்டுவது ஓர் அரிய கவிசாதுரியமாகும்.

அயோத்தியாகாண்டத்திலே தொடங்கும் இராமாயணம் யுத்தகாண்டத்திலே இராவணவதத்தோடு முற்றுப்பெறுகின்றது. கதாநாயகனும் கதாநாயகியும் நகர்நீங்குவதை அடிப்படையாகக்கொண்டு நிர்மாணஞ்செய்யப்பெறும் இப்பெருங்கட்டடத்துக்கு முன்வாயிற் பூஞ்சோலையாக அமைந்துவிளங்குவது கம்பரது பாலகாண்டமாகும். கவிச்சக்கரவர்த்தி இயற்றிய நாயகக்கோயிலுட் பிரவேசித்து, அதன் கவிச்சிற்பச் செல்வத்திலே மூழ்கிக் களிக்குமுன், வாசகருள்ளம் முன்வாயிற் சோலையில் ஆநந்தமாக உலவுமென்றும், ஆனால் இத்தகைய பாலகாண்டத்துக்குக் காவியத்தோடு அவயவசம்பந்தமில்லையென்றும் ஒரு நவீன ஆராய்ச்சியாளர் காட்டியுள்ளார். பாலகாண்டத்தைத் தன்முகப்பிலே அமைக்கப்பெற்றதோர் அழகியசோலையாகக்கொண்டுநிமிரும் கம்பரது காவியப்பூங்கோயில், அயோத்தியாகாண்டம் ஆரண்யகாண்டம் கிஷ்கிந்தாகாண்டம் சுந்தரகாண்டம் என்னும் நாற்பெருநிலைகளோடு யுத்தகாண்டத்தைக் கோபுரமாகப்பெற்று ஓங்கியெழுகின்றது. இவ்வைந்துகாண்டங்களிற் கிஷ்கிந்தாகாண்டம்மாத்திரம் காவியத்தோடு விசேடஜீவசம்பந்தம் அல்லது அவயவசம்பந்தமுடையதன்று. இதன் தொடர்பு இலேசாக அடிக்கதையோடு ஒட்டிக்கொண்டிருக்கும் ஒருவகை உபாக்கியானத்தின்தொடர்பேயாகும். இது கட்டட அமைப்பிற்கு இன்றியமையாததன்று; எனினும், கட்டட அழகினையும் காவியப் பெருமையினையும் குறைப்பதுமன்று.

[தொடரும்.]

# பிரகிருதிசாஸ்த்ரம்.

## (Physical Science).

(மதுரை அமெரிக்கன்கல்லூரிப் பௌதிகசாஸ்த்ர ஆசிரியர்

ஸ்ரீமான் N. R. கிருஷ்ணமூர்த்தி ஐயரவர்கள், M.A., எழுதியது.)

### முன்னுரை.

இவ்வியாசத்தைத் தொடங்குமுன்னர், இச்"செந்தமிழ்"ப் பத்திரிகையைப் போற்றும் அறிவாளர் பலர்க்கும் யான் செய்துகொள்ளவேண்டிய அறிக்கைகள் சிலவுள. முன்னொருசமயம், என்பால் மிகவும் உரிமை பெற்றவர்களாகிய "செந்தமிழ்"ப்பத்திராசிரியரவர்கள், பிரகிருதிசாஸ்திரப்பொருளைப்பற்றிச் சுருக்கமாகவும் தெளிவாகவும் ஆங்கிலப்பயிற்சி பெறாத தமிழ்ப்பண்டிதர்களுக்கு உதவும்வண்ணம் இச் செந்தமிழ்ப்பத்திரிகைக்கு எழுதும்படி ஆக்ஞாபிக்க யானும் இவ்வியாசத்தை எழுதலானேன். இத்தகைய முயற்சி எனக்குச் சற்றுப் புதிதேயாகையால், இவ்வியாசத்தை யெழுதும்பொழுது, இது சம்பந்தமான சிற்சில எண்ணங்கள் என் மனத்தில் உதித்தன. அவற்றைத் தொகுத்துக்கூறத் தொடங்கவே இம்முன்னுரையானது சற்று நீண்டுவிட்டது. ஆகவே, நேயர்கள் பலரும் இதன்கண்ணமைந்த பொருளைமட்டுமே ஏற்றுக்கொண்டு குற்றங்குறைகளைப் பாராட்டாது என்னை மன்னிப்பார்களெனக் கருதுகின்றேன்.

இவ் வியாசப்பொருளாகிய பிரகிருதிசாஸ்த்ரத்தின் "விமானக்காட்சி"யை அளிப்பதே எனது முக்கிய நோக்கமாகும். விமானக்காட்சி யாது? என்பதைச் சிறிது விவரிப்போம். மதுரைமாநகரின்பெருமையை ஒருவன்பார்த்துத் தெரிந்துகொள்ளவேண்டின், அதற்காக அவன் செலவிடக்கூடிய காலவளவிற்கேற்ப இருமுறைகளி லொன்றை யநுஷ்டிக்கலாம். நீண்டகாலம் அவனுக்கு இருப்பின், பட்டணத்தைப் பலபகுதிகளாகப்பிரித்து, ஒவ்வொருதினமும் ஒவ்வொருபகுதியிற் சுற்றித்திரிந்து ஆராய்ந்துவருதல் ஒருமுறையாகும். நகரப்பகுதிகளினது ஆராய்ச்சியை

முடித்து, அவ்வாராய்ச்சிகளாற் கிடைத்த காட்சிகளை மனக்கண்ணிற்கு முன்னர்த் தொகுத்து நிறுத்தியபின்னரே நகரத்தின் உருவம் அவனுக்கு விளங்குவதாகும். இம்முறையானது ஒரு குறைந்தகாலத்திற் பலநகரங் களைப்பார்க்கவேண்டிய பிரயாணிக்கு இயலாது. குறுகிய அவகாசமே யுள்ள இவன் அநுஷ்டிக்கவேண்டிய முறை யாது? விமானதிருஷ்டி முறையே. இவன் ஒரு ஆகாயவிமானத்திலேறிப் பட்டணத்திற்குமேல் நூறு அடியுயரத்தில் நின்று கீழேபார்க்கலாம். இவ்விதம் நோக்கவே, நகரின் காட்சியும், அது நாட்டின்கண் அமைந்தவண்ணமும் தோன் றும். நகரக்காட்சியின்கண், வைகையாறும், கோயிலும், அரண்மனையும், பெரியதெப்பக்குளமும், கல்லூரிக்கட்டடங்களும், சிறிதும் பெரிது மான மாளிகைகளும், பெரியவீதிகளும் தத்தமக்கேற்ற பரிமாணவித்தி யாசங்களுடன் கண்ணுக்கெதிரே நிற்கும். இந்தக்காட்சியே விமானக் காட்சியெனப்படும். இக்காட்சியில், சிறுசந்துகளும், கடைகளும், சிறு வீடுகளும் மிகவும் சுருக்கமுற்றுக் கண்ணுக்குப்புலப்படா; கட்டடங் களுக்குள்ளே நடைபெறும் நிகழ்ச்சிகளைக் காணவும் இயலாது. எனி னும், குறைந்தகாலத்திற் பிரயாணிக்கு நகரினது உருவம் கண்கூடாகக் கிடைக்கின்றது. விமானக்காட்சியிற் கிடைக்காத அநுபவங்களைப் பெறுவது, அவன் விமானத்தைவிட்டு இறங்கித் தெருக்களிற்சென்று முதன்முறையிற் கூறியவண்ணம் செய்தாலன்றி அவனுக்கு இயலாது. ஆகவே, இவ்வியாசத்தின்கண் தெளிதற்கியலாத பகுதிகளைத் தெரிந்து கொள்ள விரும்புவோர் பிரகிருதிசாஸ்த்ரப்பகுதிகளை வகுத்து விவரிக் கும் புத்தகங்களை ஊன்றிப்பயிலுவதே ஏற்றமுறையாகும்.

இவ்விதம் யான் கூறவும், இத்தகைய சாஸ்த்ரங்களை விளக்கிக்காட் டும் தமிழ்நூல்களும் உளவோ என்றுமட்டும் என்னைக் கேட்டுவிடா தீர்கள். இத்தகைய கேள்வி, யான் வெட்கித் தலைகுனிவதற்குக் காரண மாகின்றது. இதுகாறும் ஆங்கிலம்பயின்ற தமிழ்மக்களுக்குத் தமிழ் மொழியின்மீதுற்ற அன்பின்குறைவே இதற்குக் காரணமாகும். இந் நாள்வரையும் யானும் குற்றவாளிகளில் ஒருவனாகவே இருந்திருக்கின் றேன். மேனாட்டுப் பொருளாராய்ச்சிநூல்கள் தமிழ்மொழியி லியற்றப் படாததினால், தமிழ்மக்கள் எவ்வளவுதூரம் இடுக்கண்களுக்கு ஆளாகி யிருக்கிறார்கள் என்பது என்போன்ற ஆசிரியர்பலருக்கும் இப்பொழுது தான் விளங்குகின்றது. ஆனால் இந்தத்தெளிவு யாவருக்கும் உண்டா

யிருப்பதாகத் தோன்றவில்லை. சாஸ்த்ரங்கள் தமிழ்மொழியில் வெளியாகவேண்டிய ஆவசியகத்தையும், இவ்வெளிப்பாட்டிற்கு எதிர்ப்படும் இடையூறுகளையும் சற்று ஆராய்வோம்.

தற்காலம், மேனாட்டுப்பொருளாராய்ச்சி நூல்களைக் கல்லூரிகளிற் போதித்துவரும் ஆசிரியர்களி லொருபகுதியினர், தமது விஷயங்களைத் தெளிவாக எடுத்துரைக்கவும் ஆராய்ச்சியைப் போற்றிவளர்க்கவும் வேண்டிய ஆற்றல், ஆங்கிலமொழிக்கிருப்பதுபோலத் தமிழ்மொழிக்குக் கிடையாது என வாதிக்கிறார்கள். இக்கொள்கை ஒருசிறிதும் பொருந்தாது. அன்னார்களது தமிழ்மொழிப்பயிற்சியின்குறைவே இக்கொள்கைக்குக் காரணமாகும். தமிழ்மக்கட்கு இயற்கையாக உள்ளும் புறமும் ஒருங்கே அமைவது தமிழேயல்லது வேறு எந்தமொழியுமாகாது. தமிழ்மக்களிற் சிலருக்கு ஆங்கிலம் மிகப் பொருத்தமாக அமைந்திருப்பது பலவருடங்கள் நீட்டித்த விடாமுயற்சியோடும் பணச்செலவோடும் பொருந்திய செயற்கையாலன்றி இயற்கையாலல்ல. இதே காலத்தையும் பொருளையும் ஊக்கத்தையும் தம்மியல்பினதாகிய தமிழ்மொழியின் வழியாகச் சாஸ்த்ர ஆராய்ச்சியிற் செலவிட்டார்களேயானால், நமதுமக்களின் கல்வி பன்மடங்கு ஆக்கம்பெற்றுத் தற்காலமுள்ளதுபோல ஆங்கிலம்பயின்ற ஒருசிறுபகுதியினரிடத்தில்மட்டுமே தேங்கிவிடாமல், சிறிதும் பெரிதுமாகிய பல்லாறுகளாக வெளிப்பட்டுச்சென்று, நமதுதேசத்தின் செல்வத்தை ஈட்டுபவராகிய கைத்தொழின்மாக்களையும் தத்தமக்கேற்றவளவினதாய அறிவில் நிரம்பச்செய்து நமதுநாட்டிற் குடிகொண்டிருக்கும் வறுமையைப் போக்குமென்பதில் ஒருசிறிதும் ஐயமில்லை. நம் தேயத்தில் மேனாட்டுநிபுணர்களைக்காட்டிலும் கைத்தேர்ச்சிபெற்ற சாஸ்த்ர ஆராய்ச்சியாளர் பலரும் இருக்கிறார்கள்; வருடந்தோறும் அவர் தமது ஆராய்ச்சிமுறையால் மிகப்பயன்படும் பண்டங்களை உண்டுபண்ணும் அரியமுறைகளைக் கண்டுபிடிக்கிறார்கள்; பண்டங்களியற்றுவதற்கு வேண்டிய விளைபொருள்கள் பலவற்றையும் நமது நாடு ஏராளமாக அளிக்கின்றது; உடம்பால் உழைக்கும் வலியுடைய மாந்தரும் கோடி கோடியாக வேலை அகப்படாமற் பசிப்பிணியெய்தி வருந்துகிறார்கள்; இவைமட்டுமன்றிக் கைத்தொழில்களுக்கு அவசியமான மூலதனத்தையளிக்கக்கூடிய தனவந்தர்களுமிருக்கிறார்கள். ஆகவே கைத்தொழிலுக்கு இன்றியமையா உறுப்புக்களாகிய மூலதனம், பொருளாராய்ச்சியாளர்,

விளைபொருள்கள், உடம்பாலுழைக்குந் தொழிலாளர் ஆகிய நான்கும் அமையப்பெற்றும், நாம் உயிர்வாழ்தலுக் கின்றியமையாத உணவு உடைப்பொருள்களுக்கும் அந்நியநாட்டினர்கையைப் பார்த்துக்கொண்டு நாளுக்குநாள் வறுமையில் ஆழ்ந்துவிடுவதேன்? இதன்காரணம், கைத்தொழிலின் நான்கு உறுப்புக்களுக்குமுள்ள இயைபு அற்றுப்போயிருப்பதே. பொருளாராய்ச்சியாளர், தமது முடிவுகளை ஆங்கிலத்திற் பிரசுரப்படுத்துகிறார்கள்; பிரசுரம்செய்தவிஷயம் ஆங்கிலத்தொழிலாளருக்கு உதவுகின்றதேயன்றி ஆங்கிலமறியாத பெரும்பான்மையோராகிய தமிழ் மக்கட்குப் பயன்படுகிறதில்லை. ஆகவே நாட்டின்செல்வத்தை இயற்றும் கைத்தொழிலின் உறுப்புக்களாகிய பொருளாராய்ச்சிஆசிரியர்களின் கூட்டத்தையும், தொழிலாளர்கூட்டத்தையும், தனவந்தர்கூட்டத்தையும் அறிவில் ஒற்றுமைப்படுத்தும் பலபிணிப்புக்களுள் முதன்மையாவது அந்தநாட்டின் தாய்மொழியேயாகும்.

இனி, இவ்வண்ணம் பிணிக்கவேண்டிய தமிழ்மொழியின்நிலை எப்படியிருக்கின்றது? இது பண்டிதர்களாகிய பெரியோர்களாற் போற்றப்பட்டுப் பெரிய இடுக்கண்களுக்கும் அவமானங்களுக்கு முட்பட்டும், உயிர்நீங்காது "யானும் இருக்கிறேன் இருக்கிறேன்" என்று, இறந்துபோனதுபோக எஞ்சிநிற்கும் சில பண்டைத் தமிழ்ப்பாடல்களிலும் உரையாசிரியர்நூல்களிலும் காதுகொடுத்துக் கேட்போரின்றி, மெல்லியகுரலுடன் ஒலித்துக்கொண்டிருக்கிறது: பண்டிதர்களால்மட்டுமேயன்றி யாவராலும் போற்றிவளர்க்கப்பெறின் நமது பண்டைத்தமிழானது நமது நாட்டினளவினதாதலேயன்றி உலகமுழுதையும் தனது முழக்கத்தினால் நிரப்புமென்பதை நாம் இன்னமும் அறிந்திலம். அந்தோ! நம் பண்டிதர்கள் இதுகாறும் உடம்பு முயிரும் சேர்ந்து வாழ்தற்குவேண்டிய உண்டிச்செலவுக்கும்போதுமான சம்பளமின்றியும், அவர்கள் சிறிதளவும் இன்புறுதற்குக் காரணமான, உலகத்தின் நன்மதிப்புரையின்றியும் தாம் ஏற்றுக்கொண்ட தமிழ்ப்பொருளைக் காப்பாற்றிவரும் பெருந்தகைமைக்கு நாம் எவ்வண்ணம் நமது நன்றியைச் செலுத்துவோம்? அன்னோருக்குத் தமிழ்மொழி ஆக்கம்பெறுவதே தாமுற்ற நோன்பன்றோ? இத்தகையார் ஆங்கிலப்பயிற்சியில்லாததனாலும், தமிழ்மொழியில் மேனாட்டுப்பொருளாராய்ச்சிநூல்களிபற்றப் பெறாததினாலும், மிகவும் வருந்திநிற்கிறார்கள். ஆதலின், நமது சாஸ்த்ர

ஆசிரியர் பலரும் பண்டிதரிடம் தமிழ்மொழியைப் பல்காலும்பயின்று மொழியறிவினல் நிரம்பி, பய்ன்பொருந்தும் தமிழ்ச்சொற்களாற் றமது நூதன விஷயங்களைப் புத்தகங்களாக எழுதுவதே ஏற்ற கடமையாகும்.

இவ்வண்ணம் தமது கடமையை நன்குணர்ந்து செந்தமிழ்ப்பயிற்சியையும் நன்குபெற்றுத் தமிழ்நூல்க ளியற்றப்புகும் ஆசிரியர்களுக்கு ஏற்படக்கூடிய தடங்கல்கள் பலவுள. பெரும்பான்மையோராகிய செந்தமிழ்ப்பயிற்சியில்லாத தமிழ்மக்களைக்கொண்டே கைத்தொழில் நடத்த வேண்டியிருக்கிறது. அவர்களுக்கு விளங்கக்கூடிய எளியநடையிலேயே நூல்களையும் இயற்றவேண்டியிருக்கிறது. இவ்வெளிய தமிழ் நடை யாதெனில் தற்சமயம் வழங்கிவரும் பேச்சுத்தமிழேயாகும். இந்தப் பேச்சுத்தமிழுக்கும் பண்டிதர்தமிழுக்கும் இடையே ஒருபெரும் பிளவு ஏற்பட்டிருக்கிறது. தற்காலம் மக்கள்வாயில் வழங்கிவருவனவாகிய மலையாளபாஷைக்கும் தமிழ்ப்பாஷைக்கும் எவ்வளவு வித்தியாசமிருக்கின்றதோ அவ்வளவு வித்தியாசம் பேச்சுத்தமிழுக்கும் இலக்கணத்தமிழுக்கும் ஏற்பட்டிருக்கிறது. எனவே என்னைப்போன்ற ஆசிரியனொருவன் பண்டை இலக்கணத்தமிழிலே ஒருநூலை இயற்றினல், அது ஒரு சிறுபகுதியோராகிய பண்டிதர்களுக்கு உதவுமேயன்றி, எந்தப் பெரும்பான்மையோராகிய சாதாரணமக்களுக்குப் பயன்படவேண்டுமோ அவர்களுக்கு விளங்காது. இலக்கணத்தமிழை அறவே ஒழித்துப் பேச்சுத்தமிழிலேயே புத்தகங்களை இயற்றுவோமெனின், வேருெரு இடுக்கண் விளைகின்றது. சுமார் முதல் பத்து வகுப்புக்கள்வரை பேச்சுத் தமிழைக்கொண்டே நூல்க ளியற்றிவிடலாம்; ஆனல், கல்லூரிகளிற் பயிலப்பெறும் எப். ஏ., பீ. ஏ., எம். ஏ., பரீக்ஷைகளுக்குரிய உயர்ந்த விஷயங்களை உணர்த்தவேண்டிய போதுமான ஆற்றல் பேச்சுத்தமிழுக்குக் கிடையாது. எனவே, சாஸ்த்ரநூலாசிரியர், ஒன்றுக்கொன்று பல முரண்பாடுகளுள்ள பேச்சுத்தமிழையும் பண்டிதர்களின் இலக்கணத்தமிழையும் ஒருங்குபடுத்தும் மிகக்கடினமானகாரியத்தை மேற்கொள்ளவேண்டியிருக்கிறது. இவ்வண்ணம் ஒருங்குபடுத்தும் இயல்பு தமிழ்மாபுக்கு விரோதமன்று. தொல்காப்பியத்திற்கும், பவணந்தி முனிவரியற்றிய நன்னூலுக்குமுள்ள வித்தியாசங்கள் பலவுள. முதனூலிலுள்ள பலசூத்திரப்பொருள்கள், மொழிவழக்கில் மறைந்துபோனதனுற் கைவிடப்பட்டன. மக்கள்வழக்கிற் புதிதாகத்தோன்றியுள்ள

பல பொருள்களும் இலக்கணவரம்புக் குட்படுத்தப்பெற்றிருக்கின்றன. நமது தமிழ்மொழியானது தற்சமயம் உலகியலில் ஆக்கம்பெறவேண்டின், அதற்கு ஒரே வழிதானுண்டு. பண்டைத் தமிழ் இலக்கண இலக்கிய நூல்களிற் பெரிதும் பயின்று, தமிழ்ச்சுவைமிக்க சொற்களால் நிரம்பியிருப்பதோடு தமிழ்மக்கள் தற்காலம் உலகவழக்கிற் பயின்று வரும் பான்மைக்கேற்பப் பெரிதும் வழங்கிவரும் ஆற்றல்பெற்ற சொற்களையும் பொருத்தமாக ஏற்று, நூற்றுக்கணக்கான புதியபுதியவிஷயங்களை உணர்த்தும் நூல்களை ஆசிரியர்கள் இயற்றவேண்டும். இதுவேயன்றிப் பல்வேறு நாட்டார்கள் ஒருங்குசேர்ந்து சாஸ்த்ர ஆராய்ச்சியில் வழங்கிவரும் சாஸ்த்ர பதங்களை (Scientific terms), அவை எப்பாஷையிலிருந்தாலும் சரி, துவேஷம்பாராட்டாது ஏற்ற திரிபுகளுடன் தமது நூல்களின்கண் அமைக்கவேண்டும். இத்தகைய பதங்கள் லத்தீன், கிரேக்கம், பிரஞ்சு, ஜர்மன், ஆங்கிலம் ஆகிய மொழிகளினின்று தேர்ந்தெடுக்கப்பட்டுப் பல்வேறு பாஷைகளுள்ள தேயத்தார்பலராலும் ஒருங்கு வழங்கப்பெற்றுவருகின்றன. நமது தமிழ்மொழியில் அவற்றிற்கு இடமில்லையென்பது ஒருசிறிதும் பொருந்தாது. இவ்விதமாக நூல்கள் பல தமிழ்மொழியி லியற்றப்பெற்றபின்பு, பண்டைத்தமிழ் நூல்களையும், புதியனவற்றையும் ஒருங்குகூட்டித் தமிழ்மொழிக்கு உரிமைபெற்ற பண்டிதர்களிற் பெரியோர் பலரும் தலைப்பெய்து, தமிழிலக்கணநூல் வரைதல்வேண்டும். அப்படிக்கிடைக்கும் இலக்கண நூலானது, தொல்காப்பியம் நன்னூல் இவற்றைப் பெரிதும் தழுவிக் கால தேய நடவடிக்கைக்கு ஏற்றவாறு கிடைத்த சில வேறுபாடுகளுடன் பொருந்தும். இத்தகைய இலக்கணநூலின் வரம்பிற்கு எல்லா நூல்களையும் உட்படுத்துவது கற்றறிந்தோர் கடமையாகும்: இக்கடமையைநிறைவேற்றுவதும் மொழியதிகாரிகளாகிய பெரிய பண்டிதர்களுக்கு எளிதிற் கைகூடும். இவ்வண்ணம் தற்கால வியல்புக்கேற்றவாறு இணங்காமல், புதியநூல்கள் பண்டை இலக்கணவரம்புகளினின்று சிறிதளவும் பிறழக்கூடாது என்னும் கோட்பாட்டையே மேற்கொண்டால், மேனாடுகளுக்கு இதுகாறும் ஆக்கத்தையளித்துவரும் பொருளாராய்ச்சிநூல்கள் தமிழ்மொழியில் அமைவது சிறிதும் இயலாத காரியமேயாகும்.

இதனுடன் இந்த நீண்ட முன்னுரையைநிறுத்தி வியாசத்தைத் தொடங்குவோம்.

# பிரகிருதிசாஸ்த்ரம்.

ஆங்கிலமொழியில் பிஸிகல் ஸயன்ஸு (Physical Science) எனப்படும் சாஸ்த்ரத்தினைப் 'பிரகிருதி சாஸ்த்ரம் என வழங்குதல் பொருந்தும். இதற்கு ஆராயப்படும் விஷயம், எங்கும் வியாபித்த வெற்றுவெளியும், அதில் இயங்கும் சக்தியும், அச்சக்திக்கு வசப்பட்ட ஜடப்பொருளுமே. இடம் சக்தி பொருள் இம்மூன்றினையும், முறையே ஸ்பேஸ் (Space) இனர்ஜி (Energy) மாட்டர் (Matter) என ஆங்கிலத்தில் வழங்குவார்கள். மேனாட்டுமுறையில் இவற்றின் இலக்கணம் பின்வருமாறு:—எங்கும் வியாபித்த வெற்றுவெளியே இடம்: பளுவுடன்கூடி இடத்தை நிரப்புவதே பொருள்: பொருள் பற்பலவிதமாகத் திரிதல், இடம்விட்டு இடம் மாறுதல் முதலிய தொழில்களை இயற்றுவது சக்தி.

பிரகிருதி சாஸ்த்ரத்தை மூன்றுபிரிவுகளாக வகுத்திருக்கிறார்கள். அவை தமிழ்மொழியில் பௌதிகம், ரசாயனம், பௌதிகரசாயனம் எனப்படும். இவற்றை ஆங்கிலத்தில் முறையே பிஸிக்ஸ் (Physics) கெமிஸ்த்ரி (Chemistry) பிஸிகல் கெமிஸ்த்ரி (Physical Chemistry) என வழங்குவார்கள். ஜடப்பொருளின் வெளிப்படைக்குணங்களும் சக்தி வெளிப்பாட்டின் இயல்புகளும் பௌதிகத்துக்குரிய விஷயங்களாகும். ஜடப்பொருளின் உட்படைக்குணங்களையும், அக்குணங்களாக வகுக்கப்பட்ட பொருளினங்கள் ஒன்றோடொன்று இயைபுறுவதனால் வரும் திரிபுகளையும் ஆராய்வது ரசாயனத்தின் நோக்கமாகும். இவ்விரண்டு வகுப்புக்களுக்கும் பொதுவான பிரகிருதிசாஸ்த்ரவிஷயங்கள் பௌதிக ரசாயனத்திலுள் அமையும். இந்தப்பகுதியில், ஜடப்பொருளின் மாறுபாடுகளா லுண்டாகும் சக்தி வெளிப்பாடுகளும், பொருள் சக்தி இடம் இம்மூன்றுக்குமுரிய சூட்சும இயைபுகளும் ஆராயப்படும்.

பிரகிருதிசாஸ்த்ர ஆசிரியர்கள் இம்மூன்று பகுதிகளை ஏற்படுத்திக்கொண்டது ஆராய்ச்சிமுறையில் ஏற்படும் சௌகரியத்தை நோக்கியே. ஊன்றிநோக்குவோமானால் மேற்கூறியபாகுபாடுகள் உண்மைப்பாகுபாடுகளாகா. ஒரு நிகழ்ச்சியை எடுத்துக்கொண்டால், இதன் ஆராய்ச்சி இன்ன சாஸ்த்ரப்பகுதிக்குரியதென ஒரு பொதுவகையாற் கூறலாமேயன்றி இதற்கே உரியது என நிச்சயங்கூறுதல் இயலாது. ஆராய்ச்சியின் றேர்ச்சி ஒருயர்நிலைக்கு வரவே, பொருள் சக்தி இடம் இம்மூன்

றுக்குமுள்ள நுண்ணியதொடர்பு தோன்ற, அவ்வாராய்ச்சியானது பௌதிக ரசாயன இலக்கண வரம்புகளைக் கடந்துசெல்லுகின்றது. பௌதிக ஆராய்ச்சிவழியிலிறங்கிய ஆசிரியர்பலர் தற்காலம் ரசாயனவிஷயங்களில் அரியநூல்களை இயற்றிவருவதே மேற்கூறியதற்கு ஏற்ற சான்றாகும்.

இதோடு பிரகிருதிசாஸ்த்ரத்தின் இலக்கணத்தை நிறுத்தி, இதைப் பயிலும் முறையை எடுத்துக்கொள்வோம். சாஸ்திரஆராய்ச்சி பிரத்தியக்ஷப்பிரமாணத்தை மூலாதாரமாகக் கொண்டிருக்கின்றது. ஒவ்வொரு நிகழ்ச்சியும் கல்வியில் உயர்ந்தோர்முதலாக வெகு சாமான்யருக்கும் பொதுவாயுள்ள ஐம்புலன்களால் ஏற்ற கருவிகளைக்கொண்டு ஆராயப்பட்டு உள்ளது உள்ளவாறு உரைக்கப்படவேண்டும். பிரத்தியக்ஷப் பிரமாணத்தை அடிப்படையாகக்கொண்டு திட்டமாகச்செய்யப்பட்ட ஒரு பரிசோதனை ஒரு சித்தாந்தத்துக்கு முரண்பாடான முடிபுகளை அளித்தால், அந்தச் சித்தாந்தத்தின் அழகுபற்றியோ அல்லது பழமைபற்றியோ அல்லது இயற்றியோர் பெருமைபற்றியோ, பரிசோதனையின் முடிவை அலக்ஷ்யம் செய்வதற்கு ஒருபொழுதும் உடன்படார்கள் உண்மை ஆசிரியர்கள். முறைமுறையே கிடைக்கும் நூதன அநுபவங்களைத் தொகுத்துப் பழைய சித்தாந்தங்களை ஏற்றவாறு மாற்றி, கிடைத்த அநுபவங்களை ஒருங்குபடுத்துவதே அவர்கள் கடமையாகும். இப்படிச்செய்துபோகவே, நூற்றாண்டுகள் செல்லச்செல்லச் சித்தாந்தங்களும் மாறிச்செல்வது பிரகிருதிசாஸ்த்ரத்தின் இயல்பாகும். ஆகவே, உண்மை ஆசிரியர்கள், 'ஏதோ எங்களுக்குத் தெரிந்தவரை இந்தச் சித்தாந்தம் உண்மை' யென்று சொல்வார்களே ஒழிய இது நிச்சயமாகவே உண்மை என்று சாதிக்கமாட்டார்கள். வருடந்தோறும் அநுபவஞானம் அதிகரித்துச்செல்வதனாற் சித்தாந்தங்களின் உண்மைப்பகுதியானது கிரமமாக அதிகரித்துக்கொண்டே போகும். ஆகவே, சாஸ்த்ர ஆராய்ச்சியானது உண்மைத்தத்துவத்தைநோக்கிச் சிறிது சிறிதாக நெருங்குகின்றது. எனவே, இவ்வுலகத்துமாந்தர் தத்துவஞானத்தில் தினேதினே தேர்ச்சியடைந்துவருகிறார்கள். பின்னிட்ட ஒருகாலத்தில் (பல்லாயிரம் நூற்றாண்டுகளுக்குப் பிற்பாடு இது ஏற்படலாம்.) உலகமாந்தர் தத்துவஞானிகளாகி விடுவார்கள். இக்கொள்கை மேனாட்டு ஆசிரியர்கள் மனதினில்மட்டுமேயன்றிச் சாதாரண ஆடவர்பெண்டிர் மனத்திலும் ஊன்றியிருக்கின்றது. இத்தகைய மானிடமுன்னேற்றத்தை மேனாட்டார் புரோகிரஸ் (Progress) என்றும் இவலூஷன் (Evolution) என்றும் பெயரிட்டுக்கூறுவார்கள்.

இனி, பௌதிக ரசாயனசாஸ்த்ரங்களின் இலக்கணங்களைத் தனித்தனியாக எடுத்துச் சற்று விவரிப்போம்.

[தொடரும்]

உ

# இராஜராஜகேசரி என்னும்

# கண்டராதித்ததேவர்

[கி. பி. 947–48 முதல் 954–55 வரை; சகம் ௮௭0 முதல் ௮௭௭ வரை.]

முதலாம்பராந்தகனது மூத்தமகனான இராஜாதித்தன் இரட்டவரசனான கன்னரதேவனோடு தக்கோலத்திற் போரிட்டு இறந்தானென்றும், இவனை யானைமேற்றுஞ்சினதேவரென்று வழங்குவரென்றும் முன்னர்க்கூறினேன். இவனது இளவலான கண்டராதித்ததேவர் இவனுக்குப்பின் அரசுகட்டிலேறினாரென்று திருவாலங்காட்டுப்பட்டயங் கூறும். இவர் சோழவரசராக முடிசூட்டப்பட்டாலும் இவருடைய ராஜ்யம் பராந்தகதேவனுக்குமுன் னிருந்த எல்லைக்குள் அடங்கிவிட்டதென்று கூறவேண்டியிருக்கிறது. இதற்குக் காரணம் கன்னரதேவன் இராஜாதித்தனைச் சூதாகக்கொன்றபின் தொண்டைநாட்டைத் தன்னதாக்கிக் கொண்டதே. [கன்னரதேவனுடைய கல்வெட்டுக்கள் இவன் கச்சியும் தஞ்சையும் கொண்டதாகக்கூறினும், இவன் வெள்ளாற்றுக்குத்தெற்கில் அடியெடுத்துவைத்ததேயில்லையென்று திட்டமாய்க்கூறலாம். இவன் தெற்கே ஆண்டிருந்தால் இதுவரை ஒருகல்வெட்டாவது கண்டுபிடிக்கப்பட்டிருக்கும்.] ஆயினும், தம் தந்தையைப்போன்று கண்டராதித்தரும், கன்னரதேவனை எதிர்த்துப் போரிட்டு வெற்றிபெறவில்லை; அவர் ஏனையரசர்களைப்போல வலுவிற் போருக்குச்செல்லுங் குணமுடையவரல்லர். சிவத்தியானத்திலேயே காலத்தைக்கழித்தவர். இவரது திருப்பாடல்கள் சைவத்திருமுறைகளிலேறும் பெருமை பெற்றிருத்தலாலேயே இவரது பெருமை விளங்கும்.

இவர் சிவத்தியானத்தில் ஆழ்ந்திருந்தாராயினும், ஆட்சியிலாவது வீரம் சூழ்ச்சிகளிலாவது குறைவுடையவரென்றெண்ணக் காரணமில்லை. இவருக்கு உதவியாக அரிஞ்சயன் உத்தமசீலன் அரிகுலகேசரி என்ற மூன்று தம்பிமார்களிடத்து மூன்றுபடையும், அரிந்தமன் என்ற மறுபெயரையுடைய அரிஞ்சயன்மகனான சுந்தரசோழன்கீழ் ஒருபடையும் இருந்தன. இவர்கள் நான்குபக்கங்களிலுமிருந்து சோழநாட்டைக் காவல்புரிந்துவந்தனர், இவ்வளவு பலத்தோடிருந்தும் இவர் ஒருவரை

யும் எதிர்க்காமைக்கு முக்கியகாரணம் இவரது ஈசுரத்தியானமே. இவருக்குப்பின்வந்தார்செய்தகாரியங்களை நோக்கும்போது இவரது அமைதி குன்றிடையிட்ட விளக்குப்போற் றுலங்குகிறது.

இவர் இவ்வாறு உலகப்பற்றைவிட்டவரென்பதைக் கண்ட வீர பாண்டியன் தான் சோழரின்கீழ் வாழ்தலை விரும்பானய்த் தனியரசனுக விரும்பிப் போர்க்கெழ அதனைப்பொருத கண்டராதித்ததேவர் போர் முனைக்குச்சென்று அங்கே உயிர் துறந்திருக்கவேண்டுமென்று தோன்று கிறது. இதனாலேதான் இவ்வீரபாண்டியன் 'சோழன்றலைகொண்ட வீரபாண்டிய' னென்று தன்னை இறுமாப்புடன்கூறிக்கொள்ளுகிறான்.

வீரபாண்டியனாற் கொல்லப்பட்ட சோழவரசர் கண்டராதித்த ராவர். வேறொருவராக இருக்க இயலாது. ஏனெனில் இவன்காலத்து அரசாண்டசோழர் முதலாம்பராந்தகன், கண்டராதித்தர், அரிஞ்சயன், இரண்டாம்பராந்தகனென்னும் சுந்தரசோழன், மதுராந்தகதேவர் முதலானவர்கள். இவர்களுக்கு உதவியாகச் சுந்தரசோழன்மகனான இரண்டாம் ஆதித்தன் அரசப்பிரதிநிதியாக வடக்கேயிருந்தான். இவ்வடைவினருள் இரண்டாமாதித்தன் தான் 'வீரபாண்டியன்முடித்தலைகொண்ட' தாகப் பேசிக்கொள்ளுகிறான்; மற்றோரிடத்தில் இவன் 'வீரபாண்டியன் முடித்தலையைப் பந்தாக உருட்டினு'னென்று சொல்லப்பட்டிருக்கிறது.

சுந்தரசோழதேவர் மெய்க்கீர்த்திகளில் 'வீரபாண்டியனைச் சுரம் இறக்கினபெருமாள்' என்று காணப்படுகிறது. இவ்வாறு இவனைக் காட்டில் ஓட்டியபிறகும் நடந்த ஒருபோரில் இப்பாண்டியன் உயிரிழந் திருக்கவேண்டுமென்று தோன்றுகிறது. ஆகவே சுந்தரசோழதேவர் அரசராவதற்குமுன்னரே வீரபாண்டியன் கண்டராதித்தரை வென் றிருக்கவேண்டும். முதற்பராந்தகனது அரசாட்சியில் இவன் ஒன்றுஞ் செய்யவில்லையென்று, இவனுடைய மெய்க்கீர்த்திகள், 'மதுரையும் ஈழமுங் கொண்ட' என்று காணப்படுவதுகொண்டு உறுதியாகக் கூறலாம். முதற்பராந்தகனுக்கும் இரண்டாம்பராந்தகனுக்கும் இடையில் ஆண்டவர் கண்டராதித்தரொருவரேயாகலான் இவரே அவ் வீர பாண்டியனாற் கொலையுண்டிருக்கவேண்டுமென்பது உறுதிபெறுகிறது.

இவரது ஆட்சிக்காலம் சிலமாதங்களேயென்று சிலரும், பலஆண்டுகளென்று சிலரும் வாதிப்பர். அவர்கூறும்கூற்றுக்கள் நிலைக்கக்கூடியனவா

யில்லை. இவருக்குச் சிலர் சிலமாதங்களே கொடுக்கவிரும்புவது இவர் பெயர் செப்புப்பட்டயங்களிற் காணப்படுகின்றனவே என்னும் நோக்கத்தோடென்று சொல்லவேண்டியிருக்கிறது. இல்லாவிடிற் கண்டராதித்த தேவர் அரசாட்சிபுரியவேயில்லையென்று சாதித்துவிடுவார்கள். மற்றொருசாராரோ இவர் பரகேசரி பராந்தகன் மகனாகவே இராஜகேசரி கண்டராதித்தரெனக்கொண்டு, இராஜகேசரி என்று காணப்படும் கல்வெட்டுக்களெல்லாம் இவருடையனவென்பர். இக்கூற்றுப் பொருந்தாக் கூற்றெனக் கல்வெட்டாராய்ச்சியதிகாரிகளே தமது 1920-ம் வருட அறிக்கையில் எழுதியிருப்பது மகிழ்ச்சியைத் தருகின்றது. இவர் எவ்வளவுகாலந்தான் அரசாண்டாரென்பதை ஆராயவேண்டியதே நமது முக்கிய கடமை.

முதற்பராந்தகன் கி. பி. 947—948-க்குச் சகவாண்டு அஎ0-ல் இறந்தான். அவன் இறந்தவுடன் அவனது மூத்தமகனும் இளவரசனுமான இராஜாதித்தன் இரட்டஅரசனான கன்னரதேவனோடு சண்டையிட்டுத் தக்கோலத்திற் சகவாண்டு அஎ0 ல் இறந்தானென்று சோழபுரம் கல்வெட்டால் உறுதியாகத்தெரிகிறது. இவனையடுத்துச் சோழசிங்காதனமேறினவர் கண்டராதித்ததேவரேயாகையால் இவரது அரசாட்சியின் முதலாண்டு சகம் அஎ0க்குக் கி.பி. 948 என்பதில் ஐயமேயில்லை.

இனி இவரது ஆட்சியின் இறுதிக்காலம், அரிஞ்சயன்—சுந்தரசோழதேவரது ஆட்சியின் ஆரம்பகாலமென்று ஒப்புக்கொள்வதில் ஒருவருக்கும் தடையிராது. சுந்தரசோழதேவர் அரசுகட்டிலேறியகாலத்தைக்குறிக்கத் தகுதியான சாதனங்கள் ஏற்பட்டிருக்கின்றன. கண்டராதித்தர்மகன் மதுராந்தக உத்தமசோழதேவர் அரசுகட்டிலேறியது கலி 4071 க்குக் கி. பி. 969-970 என்பது திருவிடைமருதூர் கற்குடிக் கல்வெட்டுக்களால் அறியப்படுஞ்செய்தியாம். இவர் பட்டமெய்திய அடுத்த ஆண்டான. சகம் 893ல் சுந்தரசோழர் இறந்துவிட்டாரென்பது ஒரு முடிந்த செய்தியாம். இச்சுந்தரசோழன் பதினேழாண்டு அரசு செலுத்தினனென்று இவனது கல்வெட்டுக்களால் அறிகிறோம். இவனுடைய பதினேழாண்டுக்கு மேற்பட்டகல்வெட்டுக்கள் இதுவரை காணப்படவில்லை. இதனால் இவன் பதினேழாண்டு ஆண்டானென்று கொள்ளப்படுகிறது. ஆகவே இவனது ஆட்சிமுதல், சகம் அளஎக்குக் கி. பி. 955 ஆகும். இவனுக்குமுன் இவனது தகப்பன் அரிஞ்சயன்

ஆட்சிபுரிந்ததாகப் பட்டயங்களாலும் கல்வெட்டுக்களாலும் அறிகின்றேமேயன்றி இவன்பெயராலெழுந்த கல்வெட்டுக்க ளொன்றையும் காணேம். அவை இதுவரை கண்டுபிடிக்கப்படவுமில்லை. ஆகையால் இவன் இராஜாதித்தனைப்போல அரசுகட்டில்வறினசின்னளில் இறந்திருக்கவேண்டும்; அல்லது இவனைவைத்து இவன் மகன் சுந்தரசோழன் அரசாட்சிசெய்திருக்கவேண்டுமென்று தோற்றுகிறது. அதனாலேயே அவனுக்கு ஒரு ஆண்டும் காட்டப்படவில்லை. இதனால் அரிஞ்சயனுன சுந்தரசோழதேவரது அரசாட்சியாரம்பம் கி. பி. 955 க்குச் சகம் 877 ஆகிறது. ஆதலால் கண்டராதித்தர் ஆட்சியின் இறுதிக்காலம் அரிஞ்சயனது ஆளுகையாரம்பமான சகம் 877 என்பதில் ஐயமேயில்லை. இவர் சகம் 870 முதல் 877 வரை எட்டு ஆண்டுகள் அரசாண்டனர் என்பது ஒருதலை.

இங்ஙனம் இவர் எட்டு ஆண்டுவரை அரசாட்சிசெய்திருந்தால் இவரது கல்வெட்டுக்கள் பல காணப்பட்டிருக்கலாமே யென்ற வினவொன்றுண்டு. இவரது கல்வெட்டுக்கள் பல காணப்படினும் அவற்றை நிதானித்துநோக்காமையாற்காணப்படவில்லையென்பேன். இவர்தகப்பன் பரகேசரியாகவே இராஜாதித்தன் பட்டமின்றிஇறந்ததால், கண்டராதித்தர் இராஜகேசரி என்று பட்டம் தரித்தார். இவருக்கு அடுத்துவந்த அரிஞ்சயன் பரகேசரியும் சுந்தரசோழன் இராஜகேசரி பராந்தகதேவனுமாகையால் இது உறுதிபெறுகிறது. முதலாம் ஆதித்ததேவர் ஒரு இராஜகேஸரியாகவே, இவரை அவரினின்றும் வேறுபிரித்துக்காட்ட இவரது கல்வெட்டுக்களெல்லாம் இராஜராஜகேசரி என்று காணப்படுகின்றன. [இராஜ ராஜ கேசரி என்று கண்ட கல்வெட்டுக்கள் ராஜராஜசோழனுடையன என்பதுதான் இப்பொழுது நின்றுலாவுங்கொள்கை; ஆயினும், அவனுடைய கல்வெட்டுக்கள் கோராஜ ராஜ ராஜகேசரி என்று காணப்படுகின்றன.] இவ்வாறுள்ள கல்வெட்டுக்கள் இராஜராஜனுடையனஎன்றுசொல்லப்பெருந்தடைபாய்நிற்பன கண்டாதித்த தேவருடைய திருத்தேவியார் பலதிருக்கோயில்கட்கு இட்ட பலவரிசைகளைக்குறிக்கும் சாசனங்களே. அவர், தம் கணவன் உயிருடனிருக்கும்போதுவைத்தவைகளிற் றம்மை உடையபிராட்டியார் என்று கூறிக்கொள்ளுகிறார். அவற்றி லொன்றிரண்டு யான்கண்டபடி காட்டுவேன்.

[திருநரையூர்ச்சித்தீச்சுரம்.]

"ஸ்வஸ்திஸ்ரீ கோவிராஜ ராஜகேஸரிபர்மர்க்கு யாண்டு உ-வது திரு நரையூ (2) ர் நாட்டுதேவதானம் திருநரையூர் ஸித்தீஸ்வரமுடை (3) யார்க்கு உடையபிராட்டியாரான..............நாள் அமுதுசெய்யக்குடுத்த வெள்ளிவட்டிகையொன்று..............(4).........நூற்றுஎழுபத்து நாற்கழஞ்சும்; வெள்ளிக்கலசப்பராமா ஒன்றும் எ (5) ழுநூற்றுமுப்பதி௲ கழஞ்சும்; பொற்கை சாமரை ஒன்றும் (6)......................... ........(7) பன்மஹேஸ்வர ரக்ஷை"

[திருவாரூர் அரநெறி]

"ஸ்வஸ்திஸ்ரீ கோராஜராஜகேஸரிபன்மர்க்கு யாண்டு எ ஆவது நாள் ௩௱௩௰ல் சோழநாட்டுக் காவிரித்தென்கரை(ய்)த் திருவாரூர்க் கூற்றத்துப் ப்ரஹ்மதேயம் ஆடியப்பி வதசவெதிமங்கலத்து ஸபை யோம் ஸ்ரீயாஜ்ஞாஸ்ரீ........(2) யளம்பாநாடு ராஜராஜமேநாயகத்து திருவாரூர் அரனெறி ஆழ்வார்கோயில் திருக்கற்றளி எழுந்தருளுவிக்க உடையபிராட்டியார் செமபியன மஹாதேவியார் இக்கோயிலில் தான் எழுந்தருளுவித்த ஸ்ரீ அமரசுந்தரதேவர்..........(3)க்கும் திருஅமுதுக்கும், திருவிளக்கெண்ணெய்க்கும், திருக்கற்றளிக்கும், சுற்றுமாளிகைக்கும், திருப்பள்ளிக்கட்டில் மண்டபத்துக்கும் புதுக்கூற்றமாகவும் பலிசைக்கிட்டுக்கொள்கவென்று அருளிச்செய்துசட்டினகாசு ௨௲௩௱௪௰."

இத்தேவியார், தம் கணவனிறந்தபின்னருஞ் சிவத்தொண்டிலீடுபட்டிருந்தமையால் அக்காலத்திலெல்லாம் தம்மை 'உத்தமசோழதேவரைத் திருவயிறுவாய்த்த உடையபிராட்டியார் செம்பியன் மஹாதேவியா'ரென்றும், கண்டராதித்ததேவர் உடையபிராட்டியார் செம்பியன்மஹாதேவியாரென்றும் கூறிக்கொள்கிறார்: ஆகவே உடையபிராட்டியாரென்று மாத்திரம் காணப்படுபவை இவரது கணவனுரான கண்டராதித்தர் அரசாண்டகாலத்தவை யென்றேற்படுகிறது.

இவையே யன்றிக் கூரூர் என்ற கூகூர்க்ஷேத்திரத்திற் காணப்படும் கல்வெட்டுக்களில் ராஜராஜகேசரி என்பது கண்டராதித்தரையும், ராஜராஜராஜகேஸரி என்பது இராஜராஜதேவரையும் சுட்டுகிற்கின்றன. அவை வருமாறு:—

[கண்டராதித்தர்]

"ஸ்வஸ்திஸ்ரீ கோவிராஜராஜகேஸரி வந்மர் (2) க்கு யாண்டேழா வது திருநரையூர்நா (3) ட்டு சூழிதெந்ஸ்வரமுடைய பரம (4) ஸ்வாமிக்கு இங்கணாட்டுதியன் குடைய (5) ன் நம்பரையன் வைத்த நொந்தா (6) விளக்கு மூன்று; இம்மூன்றினுக்கும் நிசத (7) ம் முழக்கெண்ணை மாம்பழவனே டொ(8)க்கும் உழக்கினல் கொடுவந்து ஸ்ரீகோயிலி(9) லட்டக்கடவதாக: விலைக்குக்கொண்டுகொடுத்த பூமி (10) பாவது—இந்நாட்டு ப்ரஹ்மதேயம் விடே (11) ல்விடுகு அல்லது துக்காச்சிசதுர்வேதிமங்கலத் (12)து அரிசிலின் தென்கரைக்கிழ்க்காம்பை............
..........................................................................................................."

[இராஜராஜதேவர்]

"திருமகள்போலப்பெருநிலச்செல்வியும்
..................................................
..................................................
..........................................கலிங்கமு
மெண்டிசைபுகழ்ஈழமண்டலமும்
(2) திண்டிறல்வென்றித்தண்டாற்கொண்டதன்
னெழில்வளரூழியுளெல்லாயாண்டுந்
தொழுதகவிளங்கும்யாண்டேசெழியரைத்

தேசுகொள்கோவிராஜராஜராஜகேஸரி பன்மரான ஸ்ரீராஜராஜதேவர்க்கு யாண் (3) டு 0உ வது க்ஷத்திரியசிகாமணிவளநாட்டுத் திருநரையூர் நாட்டுக் கூகூர் ஆதித்த ஈசுரமுடையார்..............................."

இவ்விரண்டு கல்வெட்டுக்களின் எழுத்தும் வேறுபடுகின்றன. இவற்றால் இவருடைய கல்வெட்டுக்கள் பல உண்டென்று ஏற்படும். இவரது இரண்டாமாண்டுக்கல்வெட்டுத் திருநரையூர்ச்சித்தீச்சுரத்திலும், மூன்றுமாண்டுக் கல்வெட்டு காட்டுமன்னார்கோயிலிலும், ஏழாமாண்டுக் கல்வெட்டுக்கள் திருவாரூர் கூகூர் முதலான இடங்களிலும், எட்டாமாண்டுக்கல்வெட்டுக்கள் கூகூர் திருப்பாய்த்துறைமுதலான இடங்களிலும் காணப்படுகின்றன. இவைகளைப்போன்று இன்னும் பல இருக்கலாம். அவற்றைத் துருவி வெளிப்படுத்துவது அறிஞர் கடனும்.

இவருக்கு வீரநாராயணியாரென்று ஒரு மனைவி யிருந்தார். அவ்வம்மணி இவர் இளவரசராகவிருக்கும்போதே ஈசனது திருவடி நீழலை யடைந்தார். பின்னர் மழவரையன்மகளாரான செம்பியன் மாதேவியாரை மணந்துகொண்டார். இவைகளெல்லாம் முதலாம் பராந்தகன்காலத்திலேயே நடந்தவென்பது கற்குடிக்கல்வெட்டுக்களால் அறியப்படும் செய்தி. கண்டராதித்தர் தெய்வீகம்பெற்றதுபோலவே அவரது மனைவியாரும் தம்வாழ்நாளுள்ளளவும் பல சிவத்தொண்டு களைச் செய்து சிவபதமடைந்தாரெனத் தெரிகிறது. இவ்வம்மையாரது ஏவலினால், திருவாரூர் அரநெறி, குரங்காடுதுறை, திருநல்லம், திருமணஞ்சேரி முதலிய பல சிவாலயங்களிற் கணக்கற்ற திருப்பணிகள் நடத்தப்பட்டன. திருநல்லம் என்ற பெயர் மாறிக் கோனேரிராஜபுரம் என்று இக்காலத்தும் வழங்கும்படியாகச் செய்தவள் இவளே. இவள்பெயரால் நாகபட்டினம் தாலூக்காவில் செம்பியன்மாதேவி என்றொரு ஊருண்டு. அவ்வூர்க் கோயிலிற் பல கல்வெட்டுக்களுண்டு. அவற்றின் விவரம் இவ்வாண்டுக் கல்வெட்டறிக்கையில் வெளியாகலாம். இவர்கள்படிமங்கள் அக்கோயிலிலே பொறிக்கப்பட்டிருப்பதை இன்றும் காணலாம்.

இவர்கட்கு மதுராந்தகன் என்ற பெயரையுடைய உத்தமசோழ தேவரென்றொருபிள்ளை யுண்டு. இக்குழந்தை பிறந்த சின்னாளையிலே கண்டராதித்தர் ஈசனு மெந்தை யிணையடிநீழலை யடைந்தார்.

கண்டராதித்தர் கோயிற்றிருப்பணிகளைச்செய்தது போலவே, தானதருமங்களிலும் மேம்பட்டவரென்று காண்கிறது, இவர்கொடுத்த ஊரொன்றுக்குக் கண்டராதித்த சதுர்வேதி மங்கலம் என்றுபெயர். அது கண்டராதித்தம் என்ற பெயரோடு திருமழுவாடிக்கு மேற்கே ஒருமைலி லுள்ளது. அதுபோலவே நன்னிலம் தாலூக்காவில் கண்டராமாணிக்கம் என்றொரு ஊருமுண்டு.

இலக்கணவிளக்க ஆசிரியர் பரம்பரை,

திருவாரூர்ச் சோமசுந்தரதேசிகர்.

# மதிப்புரை.

சேந்தமிழிலக்கணம் முதற்பாகம் (எழுத்ததிகாரமும், சொல்லதிகாரமும்):—தமிழ் வழக்குணர்ச்சிக்கு இலக்கணநூற்பயிற்சி இன்றியமையாததென்பது யாவருமுணர்வர். அந்நூல இலக்கியப்பயிற்சியிற்சிறந்த அறிவான்மிக்கவர்களே அடைதற்குரியநிலையில் முதுநூல்களும் உரைகளும் எழுதப்பட்டுள்ளன. காலகதியால் அப்பயிற்சி குன்றுதலடைந்து வருதலையுணர்ந்து பிற்காலத்து நூலாசிரியரும் உரையாசிரியரும் அவ்விலக்கணங்களை யாவருமுணருமாறு சுருக்கமும் விளக்கமுமமையப் பல நூல்களு முரைகளு மியற்றிப்போந்தனர். அவற்றுள் மிகச்சிறந்து விளங்குவன நன்னூன்மூலமும் அதன் விருத்தியுரை முதலியனவுமாம். அவையும் இக்காலத்து ஆங்கிலகலாசாலை மாணவர்களுக்கு அறிதற்கரியனவாயிருத்தல்பற்றி நன்கு கற்பிக்கப்படாமல் அநாதரிக்கப்பட்டுவருகின்றன. அவ்வநாதரமொழியவும், இலக்கணப்பயிற்சியை வளர்ச்சியடையச்செய்யவும் வேண்டுவனபுரிதல் உலகநன்மையான ஒப்புரவாண்மையே. அவ் வொப்புரவாண்மை புரிதற்குரியரும் வித்வத் பிரபுவுமாய் விளங்கும் ஸர். பொன். இராமநாதன் அவர்களால், இந்நூ லியற்றி வெளியிடப்பட்டிருக்கிறது. இதில் நன்னூல்மூலத்தையும் அதற்குப் பலர் எழுதிய உரைகளையும் தழுவி, இலக்கணவிதிகளை இலகுவாகப் பெண்பாலார்களும் அறியத்தக்க தெளிவான உரைநடையில் அவ்வச்சூத்திரங்கட்கு முன்னரே வரைந்து, அவற்றிற்குரிய உதாரணங்களை விளக்கக்காட்டி அவ்வுதாரணங்களில் அமைந்துகிடக்கும் இலக்கணங்களை நன்கு புலப்படுத்தி, சூத்திரப்பொருளுணர்தற்கேற்ற உணர்ச்சியை முன்னரே உண்டாக்கிக்கொண்டு, பின்பு சூத்திரப்பொருளை இனிதுணருமாறு சூத்திரங்களை வரைந்து, அவ்வச்சூத்திரங்களுக்குத் தெளிவுரை யெழுதப்பட்டிருக்கிறது. இம்முறையா லெழுதப்பட்ட புத்தகம் இதையன்றி வேறொன்றுமில்லை. இப்புத்தகம் கற்பவர்களுக்குக் கற்பிக்கும்முறையிற் கைதேர்ந்த ஒருபாத்தியாயர்போற் பொருளுணர்த்தத்தக்கது. கற்பிக்கும் உபாத்திமார்களுக்கும் கற்பிக்கும் முறையை நன்கு கற்பிக்கவல்லது. ஆதலால் இப்புத்தகம் கலாசாலையிற் கற்கும் மாணவர்களும் உவாத்திமார்களும், வீட்டிலிருந்து தாமே படிக்கவிரும்புமவர்களும் வாங்கிப்படிக்கத்தக்கது. இதனையியற்றியுதவிய ஸர். பொன். இராமநாதனவர்களது ஒப்புரவாண்மை பாராட்டத்தக்கது. இன்னும் அவர்கள் எண்ணியபடியே ஏனையிலக்கணங்களையும் விரைவில் எழுதி வெளியிடுமாறு இறைவன் திருவருள் பாலிக்க.

---